
www.tamilarangam.net

Rayu

1990
சித்திரை - ஆனி
ஓசை 1
ஒலி 2



# ஓசை

P'RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE ; FRANCE

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## உள்ளே...


| | |
|---|---|
| • கருத்து | ஆசிரியர் குழு |
| • கலையும் இலக்கியமும் | சத்தியமூர்த்தி |
| • அழுக்கு மனிதன் | கௌதமன் |
| • இந்தியத் திரையுலகின்..... | பிரகலாதன் |
| • பாலஸ்தீனத்தின் அரும்புகள் | மாணி. நாகேஸ் |
| • நளினக் கலைகளால்...... (மறுபிரசுரம்) | சிவா |
| • தனி ஒருவனுக்கு... | எஸ். அகஸ்தியர் |
| • மலையக மக்கள் | ரஞ்சினி |
| • PIGALLE விருந்து.... | பாண்டியன் |
| • மணிக்கதைகள் | வசந்தன். |
| • ஜாதிகள் இருக்குதடி... | எஸ். புவனன் |
| • உண்மைக் கலைஞன் றிச்சார்ட் | ரி. றோசான் |
| • பரிஸ் - கடந்தகால இலக்கியப் பதிவுகள் | |
| • கோடீஸ்வரப் பிரபுவுடன் | தீக்ஷண்யன் |

www.tamilarangam.net

# கருத்து

கலை இலக்கியங்கள் எப்போதும் ஏதாவது கருத்துருவங்களை தாங்கியே வெளிவருகின்றன. கருத்துருவங்களற்ற கலை இலக்கியங்கள் எங்குமே முகழ்ந்ததில்லை. அதாவது, உருவங்களற்ற உள்ளடக்கமோ, உள்ளடக்கமற்ற உருவங்களோ கலை இலக்கியங்களில் வெளிப்படுவதில்லை.

மொழிகளில் கலை இலக்கிய வடிவம் தோன்றிய காலம் முதல் அது முற்போக்கு கருத்துருவங்களையும், பிற்போக்கு கருத்துருவங்களையும் தாங்கியே வெளிவந்து கொண்டிருக்கிறது

இன்று பெரும்பாலான கலை இலக்கியங்கள் பிற்போக்கு வாத கற்பனாவாத கருவூலங்களைத் தாங்கியே வெளிவந்து கொாண்டிருக்கின்றன என்பதும், முற்போக்கான மக்கள் கலை இலக்கியங்கள் மிக அரிதாகவே வெளிவருகின்றன என்பதும் யதார்த்த நிலையாகும்.

இந்நிலையில் முற்போக்கு சிந்தனா வாதிகள் தமக்குள்ளிருக்கும் அற்ப, சொற்ப பிரச்சார சாதனங்களையும் முறையாக பயன் படுத்தாது அல்லது தெரியாது தமக்குள் தாமே பகிரங்கமாக மோதிக் கொள்வதன் மூலம் பிற்போக்கு சக்திகளுக்கும் அவற்றின் பிரச்சார சாதனங்களுக்கும் வலு சேர்த்துக் கொள்கின்றனர். இந்நிலை தற்கொலைக் கொப்பானதாகும்.

இன்று பிற்போக்கு கலை இலக்கிய பீரங்கிகளே பெருவாரியான மக்களை ஆளுமை செய்து கொண்டிருக்கும்போது முற்போக்குச் சிந்தனையாளர்களும், முற்போக்கு கருவூலங்களைத் தாங்கி வருகின்ற ஏடுகளும் தம்மீதிருக்கும் பாரிய பொறுப்பை உணர்ந்து கொள்ளாதிருப்பது வருத்தத்திற்குரிய விடயமாகும்.

சமூகத்தின் பால் உண்மையான அக்கறை கொண்டவர்கள் சமூக விடிவிற்காக உண்மையாக உழைப்பவர்கள், தமக்குள் ஏற்படும் கருத்தியல் முரண்பாடுகளை சந்தேகங்களை தமக்குள்ளேயே தீர்த்துக்கொள்ளக் கூடிய உண்மையான சுதந்திரம் ஜனநாயக பூர்வமாக இருக்கும்போது இந்த வழியைப் பின்பற்றித் தம்மைப் பலப்படுத்திக் கொள்ளாது பகிரங்கமாக முட்டி மோதுவதால் யாருக்கு லாபம்?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்தப்பலவீனம் முழுக்க முழுக்க பிற்போக்கு வாதிகளுக்கே பலமாகிறது என்னும் சிறிய உண்மையாவது உரியவர்கள் கவனத்தில் எடுத்துக் கொள்வார்களாக.

முற்போக்கு கருவூலங்களைத் தாங்கி வருகின்ற வெளியீடுகள் தங்கள் கருதுகோள்களுக்கு எதிராக நச்சரிப்போடு வரும் கேலிகள் கிண்டல்கள் ஆவேசங்களுக்கெல்லாம், "ஜனநாயக சுதந்திரம்" என்ற சுலோகங்களுக்குள் பேதமைப்பட்டு தம்மைத்தாமே பலவீனப்படுத்திக் கொள்வதோடு பிற்போக்கு சாம்ராஜ்ஜியங்களுக்கே பலமும் விளம்பரமும் சேர்த்துக் கொண்டிருப்பது கவனத்திற்குரியது, கவலைக்குரியது.

"ஆயிரம் பூக்கள் மலரட்டும்" என்ற ஜனநாயக வழி பக்குவப்படாத தன்னிச்சைவாதிகளால் எப்படியெல்லாம் சுவரொட்டிசுலோகங்களாகப் பாவிக்கப்பட்டு நாசமாக்கப்பட்டு ஒரு சோசலிச நாட்டின் முற்போக்கு சிந்தனைகளையே நாசமாக்கிய வரலாறு நமக்கெல்லாம் படிப்பினைளான எச்சரிக்கை. "ஆயிரம் பூக்கள் மலரட்டும் என்ற அற்புதமான பதப்பிரயோகங்கள் பொறுப்பற்றவர்கள் வசம் சிக்கி, பூத்த மலர்களையெல்லாம் கொய்த்தெறிந்த வரலாறு நம் கண்முன்னே எச்சரிக்கையாக இருக்கின்றது.

ஒவ்வொரு அனுபவங்களினூடாகவும் ஒவ்வொரு புதிய புதிய விடயங்களைக் கற்றுக் கொள்ளும் அதேவேளை முற்போக்கு சிந்தனை உலகமானது தன்னை பலவீனப்படுத்தும் காரியங்களில் இறங்காது சகோதரபூர்வமாக தன்னை இறுக இணைத்துக் கொண்டு அனைத்து பிற்போக்கு வாதங்களுக்கும் எதிராக ஓங்கிக் குரல் கொடுக்க வேண்டுமென "ஓசை" வேண்டி நிற்கிறது.

ஆசிரியர் குழு.

*தொடர்பு முகவரி :*

"OSAI"
R.RAJAGOBAL.
5,RUE HERMEL,
75018 PARIS.
FRANCE.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கலையும் இலக்கியமும்

சத்தியமூர்த்தி

முன் இதழில் "ஆன்மீகவாத இலக்கியங்கள்" பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிட்ட நாம், இனி இரண்டாம் வகைத்தான "ரஸவாதக்" கலை இலக்கியங்கள்" பற்றிச் சற்று ஆராய்வோம்.

"ரஸவாதம்" என்பது என்ன?. அது மனசிலிருந்தா, அல்லது கருத்தியலிருந்தா, அல்லது இரண்டுமேயற்ற பூஜ்ஜியத்திலிருந்தா உதிக்கிறது என்பதை முதலில் ஐயம் திரிபறத் தெரிந்து கொள்ளவேண்டும்.

ரஸிக உணர்வுகள், மனக்கிளர்வுகள், கலை இலக்கியத்தர நிர்ணயிப்புக்கள் எவ்வகைத்தாயினும் அவை புற, அக நிலைகளை நிராகரித்துக் கொண்டு ஒரு போதும் தோன்றுவதில்லை. மனசு ஒன்றை விரும்புகிறது எனின், அந்த விருப்பம் அந்த மனசுக்கு இசைவான கருத்தியல்பினை உள்ளடக்கியிருப்பதே காரணமாகும்.

"ஒரு பெண்ணை விரும்புகிறேன்" என்றால் அதன் உண்மையான அர்த்தம் என்ன?. முகவாகு, பொருள், குணம், பொருத்தம், வயசு அறிவு, உடற்கட்டு, இடம், ஜாதி, மதம் என்றெல்லாம் உள்ளடக்கியிருப்பதாக இருப்பதால் மட்டும் இந்த விருப்பம் வருகின்றதா? இல்லை. இவை எல்லாவற்றிற்கும் மேலாக இருவருள்ளும் தேங்கிய கருத்தியல் இசைவுதான், முரண்பாடற்ற கருத்தியல்தான் விருப்பத்தை நிர்ணயிக்கிறது. கருத்தியல் இசைவாகாத பட்சத்தில் எந்த ஓர் ஆண் பெண் சேர்க்கையும் அர்த்தமற்று அழிந்து நாசமாகப் போய்விடுகிறது. சம்பிரதாய கிருத்தியங்களும் அர்த்மற்றுப் போய் விடுகின்றன. இங்கே "அழகு" என்பது ஒரு கருத்தியல் இசைவில் அர்த்தப்படுகிறதே தவிர, கருத்தியலுக்கு அப்பாற்பட்ட ஒன்றினால் நிர்ணயிக்கப் படவில்லை. இவை தவிர்ந்த தோற்றத்தில் அழகியலை தரிசிக்க முனைகிறபோதுதான் வாழ்க்கை யதார்த்தத்தை மீறிய ஒரு பொய்மையான தோற்றத்தில் ஊசலாடுகின்ற நிலையைத்தோற்றுவிக்கின்றது. இங்கே உணர்ச்சிகள், ஆசைகள், பாசங்கள், பாலுணர்ச்சிக்கிளவுகள் யாவும் கருத்தியல் இசைவின் பாற்பட்டே அழகியலாகத் தோன்றுகின்றன. இசைவு இன்றேல் சகலமும் அசிங்கமாகவே தோன்றும். இது ஓர் யதார்த்த நிலைப்பாடு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வாழ்க்கையிலிருந்தே கருத்தியல் தோன்றுகின்றது. கருத்தியலி ருந்து மனசு கிளர்கின்றதே தவிர,மனசிலிருந்து கருத்தியல் கிளர் வதில்லை. ஆக, கருதுகோள் மனசின் ஆசுவாசம்,அல்லது ரசனை யுணர்வுக்கு வழி சமைக்கின்றது. கருத்துக்கள் எவ்வாறு பொருள்க ளின், அன்றேல் இயக்க வடிவமைப்பிலிருந்து தோன்றுகின்றனவோ அவ்வாறே மனசும் மனசைச் சார்ந்த ரஸவாத உணர்வுகளும் பொ ருள்களிலிருந்தே, பௌதிகத்திலிருந்தே தோன்றுகின்றன. மனசு அல்லது சிந்தனை, ரஸனை ஒருபோதும் பொருளைப்படைப்பதில்லை மாறாக, பொருள் என்னும் பௌதீகமே மனசை, சிந்தனையை,ரஸ னையத் தோற்றுவிக்கிறது.தெளிவாகக் கூறுவதாயின் பொருளாகிய மூளையிலிருந்து சிந்தனை அல்லது கற்பனை தோன்றுகிறதே தவிர சிந்தனையிலிருந்தோ ,கற்பனையிலிருந்தோ மூளை என்ற பொருள் தோன்றுவதில்லை. இந்த உண்மைகளைக் கசடறப் புரிந்து கொள் ளாவிடின் இலக்கியங்கள் பற்றியோ,இலக்கியத்தின் தார்ப்பரியங் கள் பற்றியோ பேசுவதானது வெறும் பொய்மைகளை உயிர்மனிதர் களாக வரித்துக் கொள்வதை ஒக்கும்.

"அழகியல்" என்று நாம் எதைச் சொல்கின்றோம்?. அழகைப் பற்றி விஸ்தரிக்கும் ஒருவர், "அழகு என்றால் என்ன? என்பதை முதலில் தெரிந்து கொள்ளவேண்டும். அழகு கருத்துருவத்தில் தோன்றும் வடிவமா, அன்றேல் பல வர்ணங்களில் அலங்காரமாகத் வடிவமா என்பதனை நிர்ணயிப்பதற்குள்ள அளவுகோல் ஒரு விளை யாட்டே தவிர, மன உணர்வு அல்ல என்பது புலனாகும். "அழகா னது" என்று நாம் எதனைக் கணிக்கிறோம் என்றால்,அதன் உருவ த்தைவிட அதன் தன்மையைப் பற்றியதேயாகும்.

கோடானுகோடி அடக் கப்படும் மக்களுக்கு மார்க்சிய இயக் கவியல் தத்துவம் ஓர் அற்புதமான அழகியவாகத் தெரி கின் றது. அதேவேளை முதலாளித்துவ ஏகாதிபத்தியச் சுரண்டல்காரர் களுக்கு அதே மார்க்ஸிய இயக்கவியல் தத்துவம் பெரும் அசிங்க மாகத் தெரிகின்றது. இதன் தாற்பரியம் என்ன? எந்தக் கருது கோள் ஒருவர் நிலைப்பாட்டிற்கு இசைவானதோ அந்தக் கருது கோளின் வெளிப்பாடு அழகியவாகத் தோன்றுகின்றது. எந்தக் கருத்தியல் ஒருவர் நிலைப்பாட்டிற்கு இசைவற்றதாகின்றதோ அந் தக் கருத்தியல் அசிங்கமாகத் தோன்றுகின்றது. இதிலிருந்து நாம் "ரஸவாதம் என்றால் என்ன?" என்பதை ஓரளவு புரிந்து கொள்ள முடிகின்றது. மாபெரும் சிருஸ்டிகர்த்தா மார்க்ஸிம் கார்க்கி "உண் மை போன்ற அழகு" என்று அழகியலை இரத்தினச் சுருக்கமாகக் குறிப்பிடுகின்றார். அதாவது "உண்மைதான் அழகு" என்கிறார்

www.tamilarangam.net

நமது வள்ளுவப் பெருந்தகையும் "உண்மையையே" அழகியலாக "வாய்மை" என்னும் கூற்றாக வாழ்க்கையை அர்த்தப்படுத்துகின்றார்.

ஆக,"உண்மை" என்பது என்ன? நாம் கண்ணால் காணும் சம்பவங்கள் நிகழ்ச்சிகள் யாவும் அவை குறிப்பிடுகின்றவாறு "உண்மையானவைதாமா?" இல்லை. "விஞ்ஞானம், வரலாறு, கருத்தியல் ஆன மூன்றும் இணையாத எந்த ஒரு நிகழ்வோ சம்பவமோ ஒரு போதும் உண்மையாக இருப்பதில்லை என்று ஓர் இயக்கவியல் தத்துவம் பறைசாற்றுகின்றது. "கண்ணால் காண்பதெல்லாம் பொய்யே ஞானக்கண்ணைத் திறந்து பார் மெய்யே" என்று பழம் பெரும் பாடல் ஒன்று கூறுகின்றது. இங்கே அது என்ன சொல்கின்றது? "ஞானக் கண்ணைத் திறந்து பார்" என்கின்றது. அந்த ஞானம்தான்

அறிவின் தேடல். அறிவைத் தேடாதவன் ஞானஸ்தன் அல்லன்.எனவே மனிதனுடைய ஒவ்வோர் பார்வையும் அறிவு சார்ந்ததாயிருக்க வேண்டும். அறிவு சார்ந்த தேடலில் தான் உண்மையைக் கண்டு தெளியவேண்டும்

உதாரணத்திற்கு நம் நாட்டு வெகுஜனப் பத்திரிகைகளை எடுத்துக் கொள்வோம். அவை பணத்திற்காக மட்டுமே விளம்பரங்களை பிரசுரிக்கிறதாகச் சொல்லப்படுகின்றது. கலை இலக்கிய கருவூலங்களில் மட்டுமன்றி விளம்பரங்களிலும் அவ்வாறு சொல்லப்படுகின்றது. அதுமட்டும் உண்மையா? இல்லை. அந்த அந்த விளம்பரங்களின் கருத்தியலில் இந்தப்பத்திரிகைக்காரர்களுக்கும் இசைவுண்டு என்பதே உண்மை. எனவே ஓர் உண்மை அங்கே மறைந்திருக்கின்ற கருத்தியலையும் உள்வாங்கி நிற்கிறது. அல்லது உட்படுத்துகின்றது. அந்த விளம்பரங்கள் என்ன கூறுகின்றன?. மரணஅறிவித்தல்,திருமண விளம்பரங்களில் இவற்றைச் சுலபமாகப பார்க்கலாம். "இன்னார் சிவபதம் அடைந்தார்","இன்னார் பரகதி அடைந்தார்". என்றெல்லாம் நாக்கூசாமல் விஞ்ஞானத்திற்கு புறம்பாக பச் சைப்படு பொய்களை மிக ஆரவாரத்துடன் போடுகின்றன.தங்களைக் கல்விமான்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள் கூட பலர் தங்கள் பட்டங்களை விட்டதாரிகளாக இந்தப் பொய்மையில் மூழ்கியுள்ளனர். அழகியலுக்கு மாறான இந்த அசிங்கங்கள் அவை குறித்த கருத்தியல் இசைவாளர்களுக்கு மட்டுமே அழகியலாகவும் உண்மையாகவும் தோன்றும். உலகில் மிகப் பெருவாரியான மக்கள் இந்தப் பொய்மையின் ஆளமையில் மூழ்கி இருப்பது என்னவோ உண்மைதான். ஆனால் ஞானக் கண் கொண்டு பார்த்தால்

www.tamilarangam.net

உண்மை புலப்படும்.

அந்த "ஞானம்" என்பது என்ன?

ஒரு மனிதனின் உயிர், அதன் ஊசலாட்டம், அதன் தன்மை, அதன் பிரிவு என்னும் கூறுகளை ஒரு விஞ்ஞான அணுமுறையில் கண்டுகொள்ளும் நிபுணரால் மட்டுமே அதன் தாற்பரியத்தைக் கண்டறிய முடியும். அதனை விடுத்து முற்றாகவே விஞ்ஞானத்திற்கு புறம்பாக கற்பனாவாதத்தின் பால் "இன்னார் பரகதி போய்ச் சேர்ந்தார் எனக்கூறுவது எத்தகைய அபத்தம், எந்தப்பெரிய புனைவு தெரியுமா? ஏதோ அந்த மனிதனின் உயிரை இவர் தன் கையில் பிடித்து பரமனிடம் அல்லது பரலோகத்தில் கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டு வந்தவர் போல "இன்னார் சிவபதம் அடைந்தார், பரகதி அடைந்தார் என்று சொல்வதில் உள்ள பொய்மையை யாரும் கண்டு பார்ப்பதாக தெரியவில்லை. அஞ்ஞானம்த ான் மிஞ்சி நிற்கிறது.

விஞ்ஞானமும் அதன்பால் சமுதாய மாற்றமும் அடைந்து கொண்டுவரும் வரலாற்றுக் கால கட்டத்திலும் இந்த முதலாளித்துவப் பத்திரிகைகள் "ஜாதி,குலம்,மதம்" என்பவற்றைக் கூசாமல் திருமண விளம்பரங்களில் பிரசுரிக்கின்றன. முதலாளித்துவத்தின் இந்த அசிங்கமான விளம்பரங்களில் கருத்தியல் ரீதியான இசைவு கொண்ட அனைவருமே அவற்றையும் உண்மையாக வரித்துக் கொண்டு அவற்றில் அழகியல் இருப்பதாக மயங்குகின்றனர். இந்தப் பொய்மைக்கும் அழகியல் சேர்க்கும் மனம் மிகப் பெருவாரியான மக்களிடம் காணப்படுவதன் காரணமே, விஞ்ஞானரீதியான வாவாற்றுக்கண்ணோட்டம் கருத்தியலில் இணைவாகாததே. அதாவது சமுதாயத்தைப் பற்றிய ஞானம் அறிவு ரீதியாக முற்றாக முடங்கப்பட்டுவிட்டதால் இங்கே பொய்மை ஆளுமைப்படுத்தப் படுகின்றது.

இந்தப் பொய்யான கண்ணோட்டங்களைத் தழுவிய கலை இலக்கியங்களைத்தான் நாம் "ரஸவாதக் கலை இலக்கியம்" என்கிறோம். அதாவது சமுதாயத்தில் நிகழும் சம்பவங்களை மட்டும் ஒரு பிரச்சினையாகக் காட்டி அதனை விஞ்ஞானரீதியாகவோ, வரலாற்று வாயிலாகவோ கருத்தியல் ஊடாகவோ அர்த்தப் படுத்துவதை விடுத்து, பிரச்சினைகளை மட்டுமே பூதாகாரப்படுத்தி, அதில் ஓர் அழகியல் தன்மையை மாயாஜால வர்ணச் சித்திரமாக்கும் கலை இலக்கியங்கள் எத்தகைய உன்னத ரஸவாதமாயிருப்பினும் இவை யாவும் பிரச்சினைகளைக் கூறிக்கொண்டிருக்கும் முதலாளித்துவப் பிரச்சாரங்களில்தான் கொண்டு போய் விடுகின்றன. கற்பனாவோ




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கவாத இலக்கியங்கள் எப்படி மக்களையும் சமுதாயத்தையும் மாயப்பிரபஞ்சங்களாக காட்டி,தாம் காணாத பொய்மை உலகமான பரலோகத்துக்கு அழைத்துச் செல்ல முற்படுகின்றனவோ அது போன்றே ரஸவாதக் கலை இலக்கியங்களும் சமுதாயத்தை வரலாற்றிலிருந்தும் விஞ்ஞானத்திலிருந்தும் துண்டித்து நிகழும் சம்பவங்களையே பிரச்சினைகளாக காண்பித்து அந்தப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு வழிகாட்டுவதற்குப் பதிலாக அந்தப் பிரச்சினைகளுக்கே நீதி வழங்கும் தர்மாத்துக்களாக விளங்குகின்றன.

இத்தகைய ரஸவாதக் கலை இலக்கியங்கள் கலையம்சத்தில் உயர்ந்து நிற்கின்றன என்பது உண்மையே. ஆனால் விஞ்ஞானம் கருத்தியல், வரவாறு இணையாமல் பிரச்சினைகளை மட்டும் அணுகும் இந்த ரஸவாதப்படைப்புக்களால் சமுதாயத்துக்கு எந்தவிதமான பிரயோசனமும் இல்லை. இத்தகைய கலை இலக்கியப்படைப்புக்களும் முதலாளித்துவத்துக்கே இட்டுச் செல்கின்றன.எழுத்தாளன் வாழ்க்கையை விமர்சிப்பவன் மட்டுமல்ல. அவன் வாழ்க்கையை மாற்றியமைக்கும் திறனாய்வாளனுமாவான். அந்தத் திறனாய்வே உன்னத கலை இலக்கியமாகும்.

இதனையடுத்து முன்றாம் வகைத்தான "கலையும் இலக்கியமும் பொழுது போக்கிற்காக" என்கிற படைப்பாளர்களின் தாற்பரியங்களை ஆராய்வோம்.



www.tamilarangam.net

# அழுக்கு மனிதன்

கௌதமன்

"கறுமம், கறுமம்.. அவ்வளவு இடங்கிடக்கேக்க இதுக்குள்ள வருகுது " மனதுக்குள் பொருமிக் கொண்டேன்.
மெல்லிய நெடி, குளித்துக் கிழமைக் கணக்குப்போல, ஓரளவு நாகரீகமாக உடுத்திருந்தான். கறுத்த உருவம், பரட்டைத்தலை, தாடி வளர்த்திருந்தான் வளர்ந்திருந்தது.

எனக்கும் அவனுக்கும் கொஞ்சம் கூட பொருத்தமில்லாமல் இருந்தது.

மடிப்புக்குலையாத எனது ரவுசர், சேர்ட், கையில் மினுங்கும் சீக்கோ கடிகாரம், கண்களில் "மொடேர்ண் கிளாஸ்", மாலையே வாங்கி மீண்டும் "பொலிஸ்" பண்ணிப் போட்டிருந்த புதிய சப்பாத்துக்கள்.

என்னைப் பார்த்து சாடையாகச் சிரித்தான். பின் எனக்கருகில் ஒரு "சீற்" தள்ளி உட்கார்ந்து கொண்டான்.

நானும் பதிலுக்கு வேண்டா வெறுப்பாகச்சிரித்து விட்டு கையில் இருந்த நாவலில் கவனம் செலுத்தினேன்.

என் மனம் நாவலில் லயிக்கவில்லை.
யார் இவன்? பிச்சைக்காரனா..கள்வனா..அல்லது வைன்கேஸ்?

அந்த வட்டத்துக்குள்ளும் அடக்கமுடியாது. அவன் குடித்திருக்கவில்லை. அப்போ மனநோயாளியா...!

நாவல் கையிலிருக்க, மூக்கு கண்ணாடியைச் சரிசெய்து கொள்வது போல் அவனை நோட்டமிட்டுக் கொண்டேன். அவன் என்னையே பார்த்துக் கொண்டிருந்தான்.

எனக்கு மெல்லிய பயம் பிடித்துக் கொண்டது.
இரவு மணி பன்னிரண்டைத் தாண்டி விட்டது. "மெத்ரோ"வினுள் பயணிகள் குறைந்து விட்டனர். இன்னும் நீண்டதூரம் நான் பயணம் செய்யவேண்டியிருந்தது.

ஒவ்வொரு நிலையத்திலும் "மெத்ரோ" நிற்கும்போது இவன் இறங்கமாட்டானா?.
எனக்குள் ஒரு தவிப்பு. ஆனால் அவனும் என்னுடனேயே தொடர்ந்து பயணம் செய்து கொண்டிருந்தான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சடுதியாக ஒருமுறை நிமிர்ந்தேன்.
எனது பார்வைக்காக காத்திருந்தவன் போல், மெல்லிய சிரிப்புடன் ஆங்கிலத்தில் அடக்கமாகக் கேட்டான்.

யூ ஆ ஃவ்றொம் சிறிலங்கா?
அவன் என்னுடன் சம்பாசிக்க விரும்புகிறான் என்பதை உணர்ந்து கொண்டேன். இருந்தும் முகத்தை கடுமையாக வைத்துக் கொண்டு தலையை மேலும் கீழுமாக அசைத்து "யெஸ்" என நாகரீகமாக பதிலளித்துவிட்டு மீண்டும் நாவலில் வயித்தேன்.

எனது பதில் அவனுக்கு கொஞ்சம் தெம்பைக் கொடுத்திருக்க

வேண்டும். எனக்கு இன்னும் அருகில் வந்தான்.

வயிறு குமிட்டுவது போலிருந்தது. வாயைச் சுழிக்கவும் முடியவில்லை. சற்று ஒதுங்கி இருந்து கொள்வதற்காக நிமிர்ந்தேன். அவனைப் பார்த்து புன்முறுவல் செய்து கொள்வது போல் சற்று ஒதுங்கி இருந்து கொண்டேன்.

எனது மனதின் நினைப்போ, என்னவோ நெடி அதிகமாகியது. சகித்துக் கொண்டேன்.
எனது புன்முறுவல் அவனுக்கு மேலும் தெம்பைக்கொடுத்திருக்க வேண்டும்

எனது கண்கள் பழையபடி நாவலுடனேயே ஒன்றிப் போயின. அவன் பொருட்படுத்தவில்லை.
"எக்ஸ் கியூஸ் மீ" என்றான்.
நிமிர்ந்தேன்.

"ரெண்டு நாட்களாக உணவில்லை. பசி தாங்க முடியவில்லை. படுப்பதற்குக் கூட இடமில்லை. ஒரு இரு பிராங்குகளாவது கொடுக்க முடியுமா?" அடக்கமாகக் கேட்டான்.

அவன் கேட்ட விதம் என் மனசை ஆழமாகப் பாதிக்கவே செய்தது. பரிதாபமான கண்கள், அசடு வழியும் முகம், முகத்தினில் சோகம் இழையோடியிருந்தது.

பிச்சை கேட்டே பழக்கமில்லாதவன்.

தெளிவாகத் தெரிந்தது.
எப்படியும் அவனுக்குச் சில்லறை கொடுக்க மனம் தூண்டியது.
"பேர்சு"க்குள் தாள் நோட்டுக்கள் இருப்பது எனக்கு தெரியும் ஆனால் சிலவேளை சில்லறைகள் இல்லாதுவிட்டால் தாள் நோட்டு கொடுக்க வேண்டி வந்திடுமே....

மனதுக்குள் சிறு போராட்டம்.

"எதற்கும் ரவுசர் பொக்கட்டுக்களைத் தட்டிப் பார்போம். இருந்தால் கொடுப்போம்".

தட்டிப் பார்த்தேன்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இரண்டு சைட் பொக்கட்டுக்கள்,பின் பொக்கட்டுக்கள் எல்லாம் தட்டிப் பார்த்தேன்.

சில்லறை தட்டுப் படவில்லை.

"சொறி" என்றேன்.

நானும் அசடு வழிவதைப் போல நடித்துக் கொண்டு,

"இற்ஸ் ஓ.கே தாங்ஸ்"

என்றவன், எனது அருவருப்பை உணர்ந்து கொண்டானோ என்னவோ மீண்டும் பழையபடி தள்ளி உட்கார்ந்து கொண்டான்.

"மெத்ரோ" ஓடிக் கொண்டிருந்தது.

பயணம் முடியும்வரை அவன் எனக்கு எதுவித தொந்தரவையும் கொடுக்கவில்லை.

இடையிடையே கடைக்கண்ணால் அவனை நோட்டமிட்டுக் கொண்டே இருந்தேன்.

ஏதோ ஆழமான சிந்தனையில் மூழ்கிப் போயிருந்தான்.

"இவன் நடிக்கிறானோ!"

எனது மனதுக்குள் ஒரு சந்தேகம்

நான் இறங்கும் இடம் வந்தது. "மெத்ரோ"வை விட்டு இறங்கி கொண்டேன்.

அவனும் இறங்கிக் கொண்டான்.

சற்றுப் பயமாக இருந்தது.

நடுச்சாமம். தனிப்பயணம். ஆள் நடமாட்டம் கிடையாது.

என்வழி நடந்தேன்...

அவனும் பின் தொடர்ந்தான்.

பயம் அதிகரித்தது.

"இவன் கள்வன்தான்"

மனதுக்குள் முடிவெடுத்துக் கொண்டேன்.

"வேறு யாராவது வருவார்களா!"

தேடினேன். யாருமில்லை.

"றால்கல்" எனது வேகத்துக்கு அவனும் நடக்கிறான்.

"ஓடுவோமா..."

இல்லை, ஓடினாலும் துரத்தி பிடித்துவிடுவான்.

எனது சிந்தனை பலமாகியது.

மெதுவாக நடையைக் கூட்டினேன்.

மனமோ அழுக்கேறிய அந்தப் பிண்டத்தின் மீதே,

திரும்பித் திரும்பிப் பார்த்த வண்ணம் நடந்துகொண்டிருந்தேன்.

மிக அண்மையில் நெருங்கிவிட்டான் போலிருந்தது.

இன்னும் விரைவாக நடந்தேன்.

www.tamilarangam.net

**முன்பாக இருந்த "கொங்கிறீற்" தூணொன்று, என்னுடன் மோதிக் கொண்டது.**

**பலமான அடி. விழுந்து விட்டேன். மெதுமெதுவாக மயங்கிக் கொண்டிருப்பது மட்டும் எனக்கு தெரிந்தது.**

**சில வினாடிகள் கழித்து கண்களை விழித்தேன்.**

**அருகே,**

**அழுக்கேறிய அந்த மனிதன், என்னைப்பின் தொடர்ந்து வந்த அந்த மனிதன், ஒரு காலை மடித்து முழந்தாளிட்டவாறு,தன் மடியிலே என் தலையைத் தாங்கி, மண்டையிலே கசிந்து கொண்டிருந்த ரத்தத்தைத் தன் "சேர்ட்" ஓரத்தால் துடைத்துக் கொண்டிருந்தான்.**

★

# நமீபியா

ஏறத்தாள பதினைந்துலட்சம் மக்களைக்கொண்ட நமீபியா,கால் நூற்றாண்டுகளுக்கு மேலாக ஒடுக்குமுறைகளுக்கெதிராகப் போராடி வந்தது அறிந்ததே. கடந்த மார்ச் இருபதாம் தேதி நமீபியா, ஒடுக்கு முறையாளர்களிடம் இருந்து விடுதலை பெற்றுக் கொண்டது.

1884ல் இருந்து ஜேர்மனியின் காலனியாக இருந்து வந்த நமீபியா முதலாவது உலக மகாயுத்தத்தின் முடிவில் பிரிட்டனின் காலனியாக மாறியது.பிரிட்டன் நமீபியாவை விட்டு வெளியேறியபோது நமீபியாவை தென்னாபிரிக்க நிறவெறி அரசிடம் கையளித்து விட்டு சென்றது.

நிறவெறி அரசின் கொடூர ஒடுக்குமுறைகளுக்கெதிராக நமீபிய மக்கள் "ஸ்வாப்போ" இயக்கத்தின் கீழ் அணிதிரண்டு உறுதியாக போராடி வந்தனர்.

இன்று, நமீபியாவின் விடுதலையானது ஒடுக்குமுறையாளர்களுக்கும் ஏகாதிபத்தியவாதிகளுக்கும் எதிராகப் போராடி வருகின்ற மக்களுக்கு மேலும் புதியதொரு தென்பைக் கொடுக்கும் என நம்பலாம்.

www.tamilarangam.net

# இந்தியத் திரையுலகின் ஒரு புத்துயிர் "ஷபானா ஆஸ்மி"

பிரகலாதன்

இந்திய திரையுலகில் அழுகி நாற்றமெடுத்துப்போன பிற்போக்கு கலாச்சாரங்களை நிராகரித்துக் கொண்டு ஒரு தேசத்தின் மனசாட்சியை தட்டியெழுப்புகின்ற முற்போக்கு கருத்தியலை முதன்மைபடுத்தும் முற்போக்கு மட்டங்களிலும் அதுசார்ந்த உலகப்படவழாக்களிலும் குறிப்பிட்டு பேசப்படுபவர்களுள் ஷபனா ஆஸ்மியும் ஒருவர்.

மக்கள் கலைஞரான இவர் பல்கலைக் கழகத்தில் படிக்கும் போதே சிறந்த நடிகையாகவும் முற்போக்குச் சிந்தனையாளராகவும் திகழ்ந்தார். சிறந்த முற்போக்கு கவிஞரும் பேச்சாளருமான இவர் தம் தந்தை இவருக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தார். இவர் தம் தாயார் சோகத் ஆஸ்மி இந்திய நாடக சங்கத்தில் குறிப்பிடத்தக்க நடிகையாக விளங்கினார். இவர் குடும்பம் ஒரு கலைக் குடும்பம் எனலாம். சாதாரண மக்கள் மத்தியில் மாத்திரமின்றி பல்கலைக் கழக மாணவர் மத்தியிலும் நடிகை என்ற பெயர் அருவருப்பானதும், இழிவானதாகவும் பேசப்பட்டபோதும் ஷபனா ஆஸ்மி நடிப்பையே தொழிலாகத் தேர்ந்தெடுத்தார்.

1972 ல் பூனாவலுள்ள சினிமா தொலைக் காட்சி கல்லூரியில் சிறந்த நடிகை என்கிற விருது பெற்று வெளியேறிய மறுநாளே இந்திய முற்போக்கு எழுத்தாளர் கே.ஏ.அப்பாஸ் இயக்கத்தில் இணைந்து "பாஸ்லா" என்கிற திரைப்படத்தில் நடிக்கத் தொடங்கினார். இப்படம் இரண்டு ஆண்டுகள் கழித்தே வெளியானது. அக்காலத்தில் செய்திப்படங்களையும், விளம்பரப் படங்களையும் தயாரித்துக்கொண்டிருந்த ஷியாம் பெனகல், வஹிதா ரஹ்மான் சாரதா போன்ற புகழ்பெற்ற நடிகைகளின் ஒத்துழைப்பு கிடைக்காததனால் ஷபனா ஆஸ்மியை "அங்குர்" என்ற தனது திரைப்படத்தில் அறிமுகப்படுத்தினார். எந்த ஒரு புதுமுக நடிகையும் நடிக்கத்துணியாத பாத்திரத்தில் ஷபனா ஆஸ்மி தோன்றினார். இவர் நடித்து வெளிவந்த முதல்படம் இதுவே.
தனது முதல் படத்திலேயே சிறந்த நடிகைக்கான தேசிய விருதைப் பெற்றார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1975ல் பெனகலின் நெறியாள்கையில் வெளியான "நிசாந்"என்னும் திரைப்படம் பேர்லின் பட விழாவிற்கு தேரந்தெடுக்கப்பட்ட போது ஸாபனா ஆஸ்மி முழு உலகிற்கும் அறிமுகமானார். சில கலைஞர்களிடம் காணப்படும் மிதவாதம் இவரிடமும் தலை தூக்கியதால் சில வணிகப்படங்களில் நடிக்க நேர்ந்தபோது இவர்மட்டில் இருந்த கணிப்பு குறைந்தது.மீண்டும் சத்யித்ரேயின் "சத்ரான்ஜ் கே கிலாரி" என்கிற உன்னதப் படத்தில் நடித்து கலையுலகில் தன்னை ஸ்திரப்படுத்திக் கொண்டார். இத்திரைப்படம் பிரான்ஸ் தொலைக்காட்சியிலும் இருமுறை காட்டப்பட்டது. 1983ல் "தூஸ்ரிதுல்கன்" என்னும் படத்தில் விபச்சாரியாக நடித்தார். அதேவேளை "சாமா" என்கிற படத்தில் கணவனுக்கு அடங்கிய பெண்ணாக நடித்து அப்படம் பலநாட்கள் ஓடியபோதும் பெண்ணை அடிமையாக காட்டும் அது போன்ற படங்களில் நடிப்பதை தவிர்த்துக் கொண்டார்.

இவர் நடித்த கலைப்படங்கள் சிறந்த வரவேற்பை பெற்றிருந்த போதிலும் வியாபார ரீதியில் படுதோல்வி கண்டன. ஆடல் பாடல் போன்ற அர்த்தமற்ற காட்சிகளை இவர் அறவே வெறுத்தார். இவர் நடித்த "அர்த்" திரைப்படத்திற்கு மூன்றாவது முறையாக தேசிய ரீதியில் சிறந்த நடிகைக்கான விருது வழங்கப்பட்டது. இப்படத்தில் ஆணாதிக்கத்தை எதிர்க்கும் பெண்ணாக நடித்து இந்திய பெண்களை விழித்து எழச் செய்கிறார். பெண்கள் சாந்தமானவர்கள், அடங்கியே வாழவேண்டியவர்கள் என்கிற பெண் அடிமைக் கருத்துக்களை எதிர்க்கும் பல பாத்திரங்களில் தோன்றினார். இவரின் பாத்திரங்களை ஜீரணிக்கமுடியாத மஞ்சள் பத்திரிகைகள் வீணான பல அவதூறுகளைக் கிளப்பின.

"மண்டி","தூசாரி துல்ஹான்" போன்ற படங்களிலும் இவர் விபச்சாரியாகவே நடித்து பாராட்டுக்களைப் பெற்றார்.மிருணாள் சென்னின் "கந்தார்" என்கிற படத்தில் மீண்டும் இவருக்கு சிறந்த நடிகைக்கான தேசிய விருது கிடைத்தது. இப்படத்தில் கணவனால் கைவிடப்பட்ட பெண்ணாக தனது வயோதிப தாயுடன் வாழ்ந்து வரும் இவருக்கும் அக்கிராமத்துக்கு புதிதாக வரும் புகைப்படக்கலைஞர் ஒருவருக்கும் இடையில் ஏற்படும் மென்மையான,அன்பு அழகாக சித்தரிக்கப் பட்டுள்ளது. இதில் பல இடங்களில் இவர் தனது, பார்வையாலே கதை சொல்லும் பாணி அலாதியானது.

இவர் சினிமாவில் மட்டுமல்ல நாடகத் துறையிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். நாடகங்களிலும் இவர் பல புதுமைகளைச்

www.tamilarangam.net

செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

நடிகையாகவே மட்டுமே உலகிற்கு தெரிந்த லாபனா ஆஸ்மி சிறந்த மனிதாபிமானியும் கூட பம்பாய் சேரி மக,களின, தோழியாகவும் இவர் விளங்குகிறார். பிழைப்புத்தேடி வெளியூர்களில் இருந்து வந்த மக்கள் பம்பாய் நகரில் இருக்க இடமின்றி அல்லல் பட்டுக் கொண்டிருக்கும்போது நகரை அழகு படுத்துகிறோம் என்கிற போர்வையில் சேரிகளை அப்புறப் படுத்த மாநில அரசு முடிவெடுத்தது. ஆனால் சேரி மக்களின் நிலையுணர்ந்த லாபனா ஆஸ்மி இதில் தலையிட்டு சேரி மக்களுடன் கூடி ஆர்ப்பாட்டஊர் வலம் நடாத்தி வெற்றியும் பெற்றார்.நகரத்தில் இவருக்கு இருப்பிடவசதிகளும் செய்து கொடுக்கப் படவேண்டும் னெவும் கோரிக்கையும் விடுத்துள்ளார்.

அண்மையில் நாடகக் கலைஞர் சப்தர் ஹால்மி இராணுவக் கூலிகளினாலும்,குண்டர்களினாலும் மேடையில் நடித்துக்கொண்டிருக்கும்போதே கொடூரமாக அடித்துக் கொலை செய்யப்பட்ட சம்பவம் இவரின் உள்ளத்தை நெருடிக் கொண்டே இருந்தது.அராஜகத்தின் உச்சமென கருதக் கூடிய இச்செயலை பகிரங்கமாகவே கண்டித்தார். இறுதியாக நடைபெற்ற இந்திய தேசிய திரைப்படவிழாவிலும் லாபனா ஆஸ்மியின் பெயர் வாசிக்கப்பட்டதும் யாருமே எதிர்பார்க்காத வண்ணம் அந்த மேடையை சப்தர் ஹஸ்மியின் கொலையைக் கண்டிப்பதற்காகவே பயன்படுத்தினார் இவ்வாறான பிரக்ஞை பூர்வமான கலைஞர்களின் குரல் எப்போதும் பாதிக்கப்பட்ட ,ஒடுக்கப்பட்ட மக்களின் குரலாகவே இருக்கும் என்பதில் ஐயமில்லை.

விமர்சகர்களே - படைப்பாளிகளே!
உங்கள் ஆக்கபூர்வமான பங்களிப்பை
ஓசை நட்புடன் நாடி நிற்கிறது.

ஆசிரியர் குழு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பாலஸ்தீனத்தின் அரும்புகள்

**மாணி. நாகேஸ்**

நாம் பிறந்த மண் – அது
எங்களுக்கே சொந்தம்.
எங்கள் விடியலும்
எங்கள் கரங்களில்தான்,
இதோ நாங்கள்
வீதியிலே இறங்கிவிட்டோம்...
உங்கள் ஆக்கிரமிப்பை
அழித்திட
ஆர்த்தெழுந்து விட்டோம்,
அரும்புகள் நாங்கள்
தீரமுடன் உங்கள் முன்...
உங்கள் வசம்
உயர்ரக ஆயுதங்கள்,
எங்கள் வசம்
கற்களும் தடிகளும்தான்,
உங்கள் அணியிலே
பீரங்கிகள்...
துப்பாக்கிகள்...
குண்டுகள்...
செல்கள்...
எங்களிடமோ
எம் மண்ணின்
பற்றுதல்கள்...
மனவுறுதிகள்...
நம்பிக்கைகள்...
உணர்வுகள்...
உங்கள் பின்னணியில்
அமெரிக்க அரக்கனின்
அரவணைப்புக்கள்...
எங்கள் பின்னாலோ
விடுதலை விரும்பிகளின்

www.tamilarangam.net

ஆதரவுக்குரல்கள்தான்
ஆனாலும்,
எங்[illegible] வெற்றியைத்
தடுத்திட
உங்கள் முடியாது!
ஆம்,
இஸ்ரேலின்
அராஜகக் கண்களே!
இதோ பாருங்கள்...
என் அம்மாவும்
அருகே நின்று
கவனில்
கல் போட்டுத் தருகின்றாள்..
என் வயோதிபத் தாத்தாவும்
அருகே நின்று
வழிகாட்டித் தருகின்றார்..
என் சின்னத் தம்பியும்
குறு குறு
நடையுடன்
கற்களை தேடியே
பொறுக்குகின்றாள்...
நாளை,
அவனையும்
நீ வீதியிலே காண்பாய்...
சிறுவனாய் அல்ல!
உன்
அடக்குமுறைக்கு
சிம்ம சொற்பனாய்....!

www.tamilarangam.net

# நுண் கலைகளால் நேசம் வளர்ப்போம்

**சிவா**

"பாரதமும் சிறிலங்காவும் பூகோள ரீதியில் நெருங்கிய நாடுகள் சிங்கள மக்களும், தமிழ் மக்களும் இந்திய நாட்டுடன் வம்சாவளி தொடர்புடன் கலாச்சாரத் தொடர்பும் கொண்டவர்கள். ஆனால் இன்று நிலவியதோ ராணுவத் தொடர்புதான். இந்த வேதனை தரும் நிலையை மாற்றி இரு நாட்டு மக்களிடையே நேசஉறவுக்கும் பாலமைப்பது கலைஞர்களாகிய நமது தலையாய கடமையாகும்".

இப்படிக் கூறியவர் திருமதி சோமலதா சுப சிங்கே. அண்மையில் சென்னை கிருஸ்ணகான சபாவில் நடந்த ஒரு நடனச் செய்முறை விளக்கச் சொற்பொழிவில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். பரஸ்பரம் வெறுப்பு சந்தேகம் போன்ற மாறுபட்ட அரசியல் சூழலில் இந்தச் சிங்களக் கலைஞரின் நேசத்துடிப்பு அந்த மக்களது இதயத்துடிப்பை வெளியிடுகிறது.

சென்னையில் மார்கழி கலை விழாக்கள் கொடி கட்டிப் பறந்த நேரம். சங்கீத வீத்வத் சபை என்ற "மியூசிக் அகதமி"யில் பிற்பகல் மாலை வேளைகளில் மரபார்ந்த நடன, இசை நிகழ்ச்சிகள் நடக்கின்றன. காலை நேரங்களில் இசை பற்றிய கருத்தரங்குகள் நடத்தப் படுகின்றன. இவற்றில் இசை பற்றிய சர்ச்சைகளும் செய்முறை கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறுகின்றன. இதே போல் கிருஸ்ண கான சபா நாட்டியக் கலைக்கு அழுத்தம் கொடுத்து இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளை நடத்துகிறது. தமிழ் இசைச் சங்கம் தமிழ் இசை, தமிழ்க் கலை மரபுகள் இவைகளில் அழுத்தம் கொடுத்து நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது. ருக்மணி தேவி அமைத்த கலா கேந்திரம் தனது மாணவர்கள் ஆசிரியர்களைக்கொண்டு பல நாட்டிய நாடகங்கள் நிகழ்ச்சிகள் நடத்தி பல பரிசோதனைகள் மூலம் புதிய கலை முயற்சிகளை அறிமுகம் செய்கிறார்கள். இந்த ஆண்டு இவற்றைத் தவிர இன்னும் பல கலாச்சார அமைப்புக்கள் நாட்டிய இசை விழாக்கள் நடாத்துகின்றனர்.

www.tamilarangam.net

கலைத்துறைகளில் பல மனிதநேயம் கொண்ட கலைஞர்கள் இருக்கிறார்கள். மரபார்ந்த கலை மேடைகளிலும் பல மாற்றங்களும், மாற்றுச் சிந்தனைகளும், புதிய சோதனைகளும் வளர்ந்து வருகின்றன. இவற்றுடன் முற்போக்கு கலைஞர்களின் தொடர்பும், நட்பும் பல நல்ல விளைவுகளை ஏற்படுத்தும். இந்த ஆண்டு கிருஸ்ணகான சபாவின் நாட்டிய கலா மாநாட்டை இயக்குபவர் பேராசிரியர் சந்திரசேகர். இவர் பரோடா பல்கலைக் கழகத்தில் நாடகத்துறைத் தலைவர் சென்னை கலாசேத்ரா ருக்மணிதேவியின் வழிகாட்டலில் உருவான கலைஞர். அவர் யதேச்சையாக சோமலதாவைச் சந்தித்தபோது அவரது கலை வாழ்க்கைப் பற்றி அறிந்து அவரை இந்த நாட்டியக்கலை மாநாட்டிற்கு அழைத்தாராம்.

கிருஸ்ணகான சபாவில் டிசெம்பர் 21ந் திகதி காலை திருமதி சோமலதா "மரபார்ந்த மதச்சடங்கு முறை நடனத்தில் நாடகக் கூறுகள்" என்ற தலைப்பில் ஒரு அருமையான கருத்துரை நிகழ்த்தினார்கள். பெரேடானியா பல்கலைக் கழக நாடகத்துறையில் பணிபுரியும் ஜெஸேனா கொடக்கெளடா, ஸனட் அஹெகன் ஆகிய கலைஞர்கள் குறிஞ்சி, மருத நிலங்களைச் சார்ந்த கண்டி மற்ற சம வெளிப் பகுதி நடனங்களை பேச்சுக்கு விளக்கமாக இடையே நிகழ்த்திக் காட்டினார்கள். ஆடை அலங்காரம் அவற்றின் பிரதேச வேறுபாடுகள், மேளத்தின் அமைப்பு, ஒலி, வேறுபாடுகள் இவற்றின் நுட்பங்களையும் செய்முறையிலும் காட்டி விளக்கினார்கள். புத்தமதத்தின் தாக்கம் காரணமாக, அவைமேல் மக்களிடம் சென்று வட்சனக் கலைகளாக (Classical) மாறாமல் மக்கள் கலை வடிவிலேயே(Folk Forms) வளர்ந்து வந்தது என்பதையும் குறிப்பிட்டார். இந்த நடனங்களின் பொருள்கள் பின்வருமாறு,

1. சூரிய வழிபாட்டுச் சடங்காசார நடனம்.18 பெலாபாலிகளை (பூதங்கள், முகமூடியுடன்) சூரிய தேவன் (ஒளி) வெற்றிகொளுதல் மேளத்தின் விறுவிறுப்பான முழக்கத்திற்கு ஏற்ற நடனம்.
2. கிராமக் காட்சிகள், குடிகாரக்கிழவன், அவனது குறத்தி கூந்தல் திருத்தும் கிராமத்து யுவதி, வண்ணான் வண்ணாத்தி

இவை எல்லாவற்றிலும் நடனத்திறமையுடன் நகைச்சுவையும் இளையோடுகிறது. மக்கள் கலைவடிவத்தின் உயிர்ப்பும் கொப்பளிக்கிறது. மரபார்ந்த நடன வடிவங்களையும் உள்ளடக்கத்தையுமே பார்த்து பழகிய சென்னை நகர ரசிகர்கள் இந்த வித்தியாசமான வடிவங்களின் கலை அம்சங்களை வரவேற்கத் தவறவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திருமதி சோமலதா ஒரு நாடக நடிகை, நாட்டியக் கலைஞர் நாடக ஆசிரியர், இயக்குனர் அதுமட்டுமல்ல,பிரபலமான சிங்கள திரைப்பட நடிகை, தொலைக்காட்சிப்படங்களிலும் நடிப்பவர்.

இப்டாவின் சார்பில் அவரைப் பேட்டி கண்டோம். சிங்கள நாடகத்துறை, மேடைக்கலைகள் பற்றிய பல செய்திகளை அவர் தந்தார். குறிப்பிட்ட தலைப்புக்களில் அந்தப்பேட்டியில் திருமதி சோமலதா கூறிய கருத்துக்களை தொகுத்து தருகிறோம்.

சிங்கள நாடகத்துறை.

சுதந்திரத்திற்கு முன் நாடகங்களின் பொருள் தேசபக்தியைக் கருவாகக் கொண்டிருந்தது. சுதந்திர இயக்கத்தின் மீது மக்களின் உணர்வை பிரதிபலித்தது. இந்தக் காலகட்டத்தில் நாடகத் துறையில் குறிப்பிடப்படவேண்டியவர் ஜான் டி சில்வா. சாதாரண மக்களிடம் நாடகம் பிரபலமாக இருந்தாலும் அறிவாளர்களை அது கவரவில்லை. பெண்கள் நடிக்க முன்வரவில்லை. பெண்களுக்கு நடிப்பு கௌரவமானதாகக் கருதப்படவில்லை. இசைநடனக்கூறுகளால் அது மக்களைக் கவர்ந்தது. சுதந்திரத்திற்குப் பின் குறிப்பாக 1956க்குப் பிறகு நாடகத்துறையிலும் மற்ற பல துறைகளைப் போல, மறுமலர்ச்சி ஏற்பட்டது. நாடகம் அறிவாளர்களையும் கவரத் தொடங்கியது. இதற்கு ஒரு காரணம் தாய் மொழி( சிங்களம் தமிழ்) கல்விப் பயிற்சி மொழியானதால, பல அறிவாளிகள் தாய் மொழியில் வெளிப்பாட்டைத் தொடங்கினார்கள். வடிவத்தின் கலை அம்சங்களால் மட்டுமின்றி, கருத்தாலும் மக்களைக் கவரும் நிலையை நாடகம் எட்டியது.

சரத் சந்திரர் குறிப்பிடப்பட வேண்டிய நாடக ஆசிரியர். துவக்கிய நாடகக் குழுவில்தான் திருமதி சோமலதாவும் தயாரானார். நாடகம், மக்கள் நடன வகைகள், தமிழ் தெருக்கூத்து இவைகளின் பல அம்சங்களைத் தனதாக்கிக் கொண்டது. சிங்கள இசைக்கு இந்தியாவின் வடநாட்டு இந்துஸ்தானி இசையுடன் தொடர்பு உண்டு. "மனமே" என்ற நாடகம் புத்தமத ஜாதகக் கதை ஒன்றை புதிய சிந்தனைக் கேற்ப மாற்றியமைக்கப் பட்ட கதை. சரத் சந்திரர் இதை எழுதி தயாரித்தார். மக்களின் சிந்தனையைக் கிளறும் இந்த நாட்கம் மக்களைக் கவர்ந்தது.

சுகத பால டி சில்வா என்ற நாடக ஆசிரியர் இந்த நாடகத் துறைப் போக்குக்குச் சவாலாக யதார்த்தவாத நடாகங்கள்(Reali

www.tamilarangam.net

stic theatre) உருவாக்கினார். இந்த இரண்டு போக்குகளுக்கும் அப்பால் சோவியத் நாடக மேதை ஸ்டானிஸ்லாவ்ஸ்கி, ஜெர்மன் நாடகாசிரியர் "ப்ரெக்ட்" போன்றவர்களின் தாக்கமும் பெற்றது.

இன்றைய சிங்கள நாடகங்களை மரபார்ந்த கூறுகளையும் யதார்த்த வாத கூறுகளையும் உள்ளடக்கிய ஒரு நாடகத்துறையாகப் பரிணமத்திருக்கிறது. மக்களின் பெரும் பகுதியினர் இன்று கல்வி பெற்றவர்கள், சினிமா, தொலைக் காட்சியின் வளர்ச்சிகூட நாடக மேடையை பாதிக்கவில்லை. நாடகங்களுக்கு மக்கள் திரளாக வருகிறார்கள் நாடகக் கலைஞர்கள் மக்கள் ஆதரவில் நாடகத் தொழிலை முழுநேரத் தொழிலாக ஏற்று வாழ முடிகிறது. குணசேனா கலபதி இன்றைய நாடகாசிரியர்களில் குறிப்பிடத் தகுந்தவர். "காஸ்யா லோர்கா" "யோமா" போன்ற நாடகங்கள் பிரபலமானவை.

குழந்தைகளுக்கான நாடகங்கள் சிறப்பாகத் தயாரிக்கப்படுகின்றன. இளைஞர்களுக்கான அவர்களது பிரச்சினைகளை மையமாக கொண்ட நாடகங்களும் வளர்ச்சி பெற்ற நிலையில் உள்ளன. திருமதி சோமலதா அந்த இரு துறைகளிலும் வெற்றிகரமாகப் பல நாடகங்களை இயக்கி இருப்பதாகக் கூறினார். தமிழ் நாடகத்துறையும் இந்த முறையில் வளர்ச்சியடைந்திருப்பதாகக் கூறினார். இந்தியாவில் வளர்ச்சி அடைந்த மேடை இயக்கம் வங்காளத்தில் மராத்தியத்திலும் இருப்பதைச் சுட்டிக்காட்டிய அவர் சிறிலங்காவின் நாடகத்துறையின் வளர்ச்சியை அவைகளுடன் குறிப்பிடலாம்.

திருமதி சோமலதாவுக்கு, "வசந்த தேவாஸா" "விராகே" என்ற இரு சிங்களப் படங்களில் சிறந்த துணை நடிகைக்கான ஜனாதிபதி பரிசு இரண்டுமுறை கிடைத்திருக்கிறது. அவரது கணவர் மாவட்ட நிர்வாக அதிகாரியாக பணியாற்றுபவர். அவருக்கு இரண்டு புதல்வியர், இளையவர் நடிப்பு, நநாட்டியத் துறையைத் தேர்ந்தெடுத்து கொண்டிருக்கிறார்.

நாடகக் கலைஞர்களை உருவாக்க முழு நேரப் பயிற்சி முகாம்களுடன் வாரம் ஒரு முழுநாள் வீதம் தொடர்ந்து 6 மாதத்திற்கு பயிற்சியளிக்கும் வகுப்புகளும் அவர் நடாத்தி இருக்கிறார். பிரச்சினைகளை மையமாகக் கொண்ட நாடகங்களை மக்கள் விரும்பி ரசிக்கிறார்கள். நாடகம் பொழுது போக்குக்கு மட்டுமே என்ற நிலையிலிருந்து சமுதாயச் சிந்தனையின் கலை வெளிப்பாடாக அது உயர்ந்திருக்கின்றது.

www.tamilarangam.net

பாலம் அமைப்போம்

இரு மக்களுக்கும் இடையே நேசத்தை வளர்க்க கலைஞர்களின் பங்கு எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்கு அவர் கூறும் யோசனைகள் இருநாட்டுக் கலைஞர்களிடம் கலந்துரையாடல், கலைப் பரிமாற்றங்கள் மக்களின் அடிப்படையான நட்புணர்வையும், சமாதான விருப்பத்தையும் வளர்க்கும் கலைநிகழ்ச்சிகள்.

இவைகள் மக்கள் ஒருவரையொருவர் புரிந்து கொண்டு நேச உறவுகள் வலுப்பட வழிவகுக்கும் என கருதுகிறார் திருமதி சோமலதா.

இந்தப் பாதையில் இப்டாவின் செயல்பாடுகளையும் கேட்டறிந்து தன்பாராட்டுக்களை வெளியிட்டார் அவர்.

நளினக் கலைகள் அவை நம் நேசத்தை வளர்க்கட்டும்.

**நன்றி: தாமரை**

## மணிக்கதை

மறதி 4

இருவர் பேசிக் கொண்டார்கள்.

"சமாதானமோ சண்டையோ நல்லது"

"சண்டை"

"ஏன்?"

"சண்டை வந்தால் சமாதானம் பிறக்கும் சமாதானம் பிறந்தால் **சண்டை மூளும்**.
சண்டை மூண்டால் பேச்சுவார்த்தை நடக்கும். பேச்சுவார்த்தை நடந்தால் காலம் போகும். காலம் போனால் எல்லாம் மறந்து போகும். எல்லாம் மறந்தால் சமாதானம் நிலவும்"

இவரும் பேசவில்லை.

www.tamilarangam.net

# தனி ஒருவனுக்கு......

"..தோவிருக்கச் சுளை வாங்கிகளின் தத்துவச்சிருஸ்டியான "சுரண்டல் வித்தை" என்னும் நித்திய தரித்திர நாராயணனின் ஆசீர்வாதம், தின்ற வயிறு பாதி தின்னாத வயிறு மீதியாக "அநித்தியம்" என்ற இந்தப் பூலோக வாழ்க்கையில் அந்த இரண்டு ஜீவன்களும் உழன்று கிடந்தன."

**எஸ். அகஸ்தியர்**

"களவெடுப்பியோ?"
"இல்லை"
"பொய் சொல்லுவியோ?"
"சொல்லேல"
"அடுத்தவீடு போவியோ?"
"போகேல்ல"
"கூடுவாரத்துகளோட திரிவியோ?"
"இல்ல, திரியல்ல"

செப்பமான சம்பல் அடி.

பொடியன் மிதிபட்ட நாக்கிளிப் புழுவாட்டம் சுருண்டு கீழே விழுந்தான். அடிபோட்ட பூவரசங்கம்பு,அதன் மூச்சுத் தெறித்துச் சிலும்பலாய்ப் போய்விட்டது. ஒருவித அந்தகாரத் தவிப்புத் தொங்க கெந்தகித்த பெருச்சினப்போடு கம்பை நசித்து எறிந்துவிட்டு,தாய் சின்னத்தங்கம் திண்ணையில் குந்திக் கொண்டாள்.

பொடியனை ஓரக் கண்ணால் பார்த்தாள்.

நெஞ்சிரக்கம் ஊனித்துப் புரையோட, அவளின் தேகம் கொலுக்க மூன்று இடிந்து போய்விட்டது.

குஸ்டரோகத் தவ்வல் வலிச்சல் நாய்க் குட்டிமாதிரி பையனின் உடம்பு குறாவி விட்டது. அடிபட்ட தழும்புகள் நச்சுத் தேள் புழுவாட்டம் அதைப்பெடுத்துக் கொப்பளித்து ஊதின. ரணகாயங்களிலிருந்து இரத்தக்கசிவு ஊனமாக வழிந்தது.ஊளமைக்காயங்களோ சிதிர மடங்கலும் அம்மிப் பிரளயித்தன. கேவி எடுக்கிற விக்கல் தொண்டைக் குவளையை இடறி,இடுக்கி, அடித்து, "முடுக் கிட்டுக்" கொண்டது. வாய்ச் சிணுங்கல் ஓயவில்லை.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

...பொடியனுக்கு ஏலவே கோது நெஞ்சு.மேலும் இரண்டு நாள் போசாக்கில்லாவிட்டால் பையனின் விலாச்சோனை தலை கோதப்பக்குவமான ஓர் எலும்புச் சிப்பாகிவிடும் என்பதற்கு, இன்றைய "கலவைத்தானம்" பண்ணும் நமது "ஸ்பெசலிஸ்டு"களின் சிபார்சு கூட வேண்டியதில்லை.

பையனின் கேவிக் கேவி அழ, விலா எலும்புகள் சதைப் பாடத்தை நுளுந்திப் புடைத்துக் கொண்டு தோற் சவ்வுகளைக் குத்திட்டுக்கிளம்பின.

பொடியனின் பிஞ்சு உடலில் நாலு நாளாக அரித்தெடுத்த பசி

அவனின் அடிக்குடல் சுருங்கிக் கிளர்ச்சி பண்ண ஆரம்பித்ததால் நமது "பெரியவர்கள்" காலங்காலமாகக் கத்திக் கத்திச் சொன்ன "நல்லொழுக்கம்" என்ற நற்சாட்சிப் பத்திரத்தையும் உதாசீனம் செய்து அதைக் கருத்தில் கொள்ளாமல் அவன் குட்டிச் சாத்தான் தொழிலில் இறங்கி விட்டான் என்பதைத் தாய் சின்னத்தங்கம் கசடறத் தெரிந்து கொண்டாள்.

எனறாலும், ஊர் வாய் சும்மா கிடக்குமா? இல்லாததையே இருப்பதாகச் "சத்தியம்" செய்து ஆளந்தப்படும் "பரிசுத்தமான மனிதர்கள்" இந்தப் பொல்லாப்பைக் கண்ட மாத்திரம் என்னவெல்லாம் சொல்லிப்பழிப்பார்கள் தெரியுமா?

அப்பேர்ப்பட்ட அந்த வக்கணைகளையெல்லாம் அவள் ஒரு கணம் நினைத்து உருப்போட்டுப் பார்த்தாள்.

"ஈன்றபொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனை சான்றோனெனக் கேட்க"விருந்த இந்த தாயானவளுக்கு, அப்படி ஓர் அவமானத்தை தாங்கவே முடியவில்லை.

"பசிகொண்டால் நாக்கை இழுத்துச் சாகலாம்.ஆனால் களவு என்பதை மனசாலும் நினைக்கக் கூடாது" என்று அடுத்த மரவள்ளி தோட்ட வளவுகாரரர் அடிக்கடி சொல்லிக்கொள்வதில் வேறு இவள் நம்பிக்கை பூண்டவள்.

"களவு அவமானந்தான்...?

ஆதலால், களவெடுத்த மைந்தனுக்கு அகப்பட்ட கையோடு இன்று இந்தத் தண்டனை.

இன்று அவள் "போதும் போதும்" என்ற அளவிற்கு பையனுக்கு வேண்டிய "சாப்பாடு" கொடுத்திருக்கிறாள்.

பொடியனின் தலையெழுத்து, அவன் "அதை" வாங்கிக் கட்டிக் கொண்டு எடுத்த அடி நகர்த்தாமல் நிலத்தில் விழுந்து சுருண்டு கிடந்து தேம்பிக் கொண்டிருந்தான். அந்தக் கன்ராவிக் கோலந்

www.tamilarangam.net

தான் நொந்து பெற்ற தாயான அவளின் நெஞ்சை ஆகவும் கெந்தகிக்கச் செய்து கொண்டிருக்கிறது.

'ஆ, நான் பெருங் கருமக்காறி. என்ர ராஜனுக்கு, என்ர பச்சை மண்ணுக்கு நல்லா அடிச்சுப் போட்டேனே பாவி' என்று நிர்விசாரமாகத் தன்னையே கறுவிக் கொண்டாள்.

மறுகணம், "இந்தக் கொடுவாளின்ர வயித்தில இது என்ன கறுமத்திற்கு வந்து புறந்தது?" என்று ஒரு விசுவாமித்திரக் கணை தொடுத்துவிட்டு, இந்தப் பாதகியின்ர வயித்தில வந்து சம்பவித்தது க்காக, நீ எந்தக் காலமும் உத்தரிச்சுச் சாகு" என்று முனகிக் கொண்டு ஓரக் கண்களால் அவனைப் பார்த்து நெஞ்சு விம்ம ஒரு பாட்டம் தனக்குள் பூகம்பித்துக் கொண்டாள்

கெம்பித் தகித்துப் பொம்மிய நெஞ்சுப் பொதி, அவள் கமண்டலத்தில் ஏறிப் புரையோடிய பின், மிச்சச் சக்கையாக அவள் கண்களிலிருந்து கண்ணீர் "பொலு பொலுத்துக்" கொட்டியது.

அவளின் தேகமும் இளைத்துப் போய்விட்டது.

அந்தப் பிள்ளையைத் தவமிருந்து பெற்ற "குற்றத்"திற்காக அவனை விஞ்சி அவள் வயிறு வாரக் கணக்கிலே காய்ந்து கொண்டிருக்கிறதை எப்பொழுதோ கண்மூடிய புருசனுக்கு இப்பொழுதும் ஒரு

தடவை முறையிட்டாள்.

தேவ கருணை சுரந்து அதன் அக்கினிப் பரீட்சையில் தேறியதும் "திடீரென" எழுந்த கடவுள் கடாஷத்தால் "பரமபதம்" சேர்ந்த, இது அன்றைய சித்தர்களினதும், இன்றைய நவீன தத்துவர்களினதும் பழைய கண்டுபிடிப்பின் புதிய மேஸ்தர், மாணிக்கத்துக்கு அவளின் முறைப்பாடு எங்கே தெரியப் போகிறது?. பாவம், அவள் முழு விசுவாசத்துடன் முறையிடத்தான் செய்தாள். ஆனால் அவள் வேண்டிய அனுக்கிரகம் மட்டும் கிடைக்கவில்லை. தாயும் பிள்ளையும் அழுதுவிட்ட கண்ணீர், முகங்களில் வழிந்ததுதான் மிச்சம்.

தோலிருக்கச் சுளை வாங்கிகளின் தத்துவச் சிருஷ்டியான "சுரண்டல் வித்தை" என்னும் நித்திய தரித்திர நாராயணனின் ஆசீர்வாதம், தின்ற வயிறு பாதி தின்னாத வயிறு மீதியாக "அநித்தியம்" என்ற இந்தப் பூலோக வாழ்க்கையில் அந்த இரண்டு ஜீவன்களும் உழுன்று கிடந்தன.

அன்று ஒரு நாள்...

வழக்கம் போல் எரிகிற அவள் வயிறு புதிய வேகங்கொண்டு சன்னதமாடியபோது வழக்கத்துக்கு மாறாகவே அவள் கண்கள் இருண்டு மங்கின. காதுகள் "கிண்"ரம் போட்டன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பசி...

ராஜனைப் பற்றிச் சொல்ல வேண்டுமா?

அவன் தலை அறுத்த கோழி மாதிரி, தண்ணீருக்குள் தளம்புகின்ற பாசிபோல் சோர்ந்து போய் ஊசலாடிக்கொண்டு கிடந்தான்.

குடலை அறுக்கின்ற பசி.

ஒரு கணம் "சடாரென்று" எங்கோ ஒரு சத்தம்.

அது, அந்த அடுத்த வீட்டுக்காரரின் மரவள்ளித் தோட்டத்தையடுத்துக் கிடக்கின்ற அடி வளவுப் பனைக் கூடலுக்குள்ளேயிருந்து கிழடு தட்டிய பனங்காய் ஒன்று அகோரமாய் "தொழுக்"கென்று விழுந்த தொனி.

பையனுக்கு மண்டை முட்டின யோசனை எழுநந்தது.

ஆனால்...?

மரவள்ளிக் கட்டையைப் பெயர்த்துக் கொண்டு வந்த "குற்றத்"திற்காகத்தானே அம்மா அன்று கண்டித்தாள்.?

ஆனாலும், பசி நியாயம் பேசிற்று...

'இது சும்மா விழுந்த வெறும் பனங்காய்தானே?'

பொடியனின் நடுத்தீர்ப்பு முடிவுக்கு வர ஒரு நிமிடம் எடுத்தது. புதிய உசார் பெற்றுத் துள்ளிக் குதித்து முற்றத்தை தாவினான்.

எதிரே தாய் பத்திரகாளி கோலத்தில் காட்சியளித்தாள்.

உடனே அவன் வாலைச் சுருட்டி அடுப்புக்குள் முடங்கும் நாய்க்குட்டிபோல் மெதுவாகப் போய்த் திண்ணையில் குநந்திவிட்டான்.

ஆனால்?

அந்தப் பனங்காய் விழுந்த அகத்திக்குப் பின் அவளுக்கும் மனசு "என்னவோ" பண்ணிற்று, வயிற்றுச் சுருக்கல் எக்கல் ஒருதடவை பனையேறிக் குதித்தது. சிரசு முட்டின யோசனை வந்து போயிற்று.வாய் உமிழ்ந்து ஊறிற்று.

மெல்ல அங்குமிங்கும் பார்த்து ஒரு வித நாணச் சிரிப்போடு கண்களைச் சிமிட்டிக் கொண்டு,ராஜனைப் "பரிவோடு" பார்த்தாள்

நாறல் மீனைப் பார்த்த கள்ளப் பூனையாட்டம், பயலும் அப்போது தாயை ஏற இறங்கப் பார்த்தான்.

ஒரு கணம் ஓர் இடைவெளித் தகிப்பு, இருவரையும் ஆட்கொண்டது.

"டே, ராஜா"

"என்னம்மா?"

"ஒரு சங்கதி சொல்றன்,"சட்"டென எழும்பி இப்படிக் கிட்டே வா"

அவன் தயக்கமாக எழுந்து நழுந்திக் கொண்டு கிட்டே வந்தான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவன் நமட்டிச் சிரித்தான்.

"ஏனம்மா சிரிக்கிறாய்?"

"ஓடிப் போய் பனங்காயை எடுத்துக் கொண்டு வா. வரேக்க நல்லதாப் பார்த்து ஒரு இழுவை மரவள்ளிக் கட்டையும் இடுங்கியா, போ"

அவன் பரிதாபத்தோடு, நம்பிக்கையிழந்து ஏக்க விழிகளால் பார்த்தான். பின்பு ஏங்கின விழிகளை உருட்டி தாயைப் பார்த்து முகம் வறட்டிச் சிரித்தான்.

அக்னிப் பரீட்சை, சோதனைக்களம்.

'அம்மா என்னைச் சோதிக்க, பொறுப்பான நேரத்தைக் கண்டு பிடிச்சிட்டா'

இரங்கி வழிந்த அவனின் வறட்சி விழிகள், அப்பொழுதும் அவளைப் பார்த்தபடியே கிடந்து முழுசின.

"ஏண்டா உப்புடிப் பார்க்கிறாய். போ, போய் அதை எடுத்து கொண்டா"

ராஜன் அப்பொழுதும் அசையவில்லை.

"ஏன் சுணங்கிறாய், போ"

"உண்மையாத்தான் சொல்றியோ?"

"உண்மைதான் ஓடு"

"என்னைச் சோதிக்கிறாய்?"

"இல்லையடா ராஜா"

"பிறகு நீ அடிப்பாய்"

"நான் இனி அடியன் ராஜா, ஓடிப் போய் எடுத்தா"

ஏலவே அவன் கிளித்தட்டுப் பாய்ச்சல்காரன். பையனை இனிச் சொல்ல வேண்டுமா?

எடுத்தான் ஓட்டம்.

கவடு கிழிகிற ஓட்டம்.

விண் மண் பாராமல் குருவிப்பாய்ச்சலில் ஓடிப்போய்"சாகிறேன் பெண்ணே பிடியடி பந்தயம்" என்றிருந்த ஒரு தற்குறியான வெறும் உக்கல் வேலிக் கதியால் ஒன்றைச் "சட்"டென்று முறித்துப் பொட்டுப் பிரித்துப்போன அந்த அசுர சாதனையை பெற்ற தாய் வியந்து பார்த்துக் களி கூர்ந்தவளாய் மெல்லக் குசினிக்குள்ளே பிரவேசித்தாள்.

போன பையன் திரும்பிவரக் காணோம்.

'என்ன சுணக்கம்?' என்று அவள் தனக்குள் தலையைப் போட்டு பனங்காய் பினைந்தாள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அப்போது ஒரு குரல், அது சிங்கக் கர்ஜனையாக வந்து உறுமி அவள் காதறக் கேட்டது.

"டேய் கள்ள ராஸ்கல், தாராடாது மரவள்ளிக் கட்டையை இழுத்துக் கொண்டு ஓடுற வடுவா?"

சின்னத் தங்கத்தின் நெஞ்சு கைவிட்ட பானைபோல் "நொறுக்" கிட்டது.

அவளுக்கு "விசயம்" வள்ளீசாகப் புரிந்து விட்டது.

பெண்களுக்கு நெஞ்சிலே நிறைந்து கிடக்கும் பாசம், தலையில் உள்ள மூளையின் வேகத்தை மழுங்கவைக்கவே உதவுகின்றது என்பதை இப்போதுதான் அவள் சரியாகத்தான் தெரிந்து கொண்டாள்

இருந்தும் என்ன?

தலையாடி வீட்டில் தஞ்சம் புகுந்த கள்ளன் மாதிரிச் சங்கதி பிழையாகிவிட்டது.

பொடியன் களவெடுத்த கையோடு "பிடிபட்ட பால்" பெரும் விபரீதத்தில் வந்து முடிந்துவிட்டதை,"தாய்" என்ற அவள் "சக்தி"யாற் தடுக்க முடியவில்லை.

"களவெடு, பொய் சொல்வாதே" என்ற "பெரியவர்களி"ன் சித்த ஞான வாக்குகள் அப்போது நினைவில் வந்திருக்க வேண்டும். உடனே பையன் வளவுக்காரன் காலில் விழுந்து "உண்மை"என்ற அந்த மந்திரச் செபமாலையும் உருட்டிப் பார்த்தான்.

காரியம் கை கூடவில்லை.

இந்தக் காட்சிகளையெல்லாம் அவள் கண்களில் ஊனங் கக்கப் பார்த்துக் கொண்டே நின்றாள்.

பெற்றவயிறல்லவா? விளக்கு அணைந்த மாதிரி அவள் நெஞ்சு "பக்"கென்று திகைத்தது.. கண்கள் இருண்டு கொண்டு வந்தன.

"ஐயோ, நான் நொந்து பெத்த என்ர குஞ்சே!"

அவள் அலங்க மலங்க விழுந்து கோலங் குலைந்து எழுந்து நின்று பார்த்தாள். அதற்குள்ளே அந்த வளவுக்காரச் சடாமுனி, ஆக்ரோசமாக ஓடிவந்து அவன் முதுகிலே அதே மரவள்ளிக்கட்டையைப் பறித்து அடித்த அடி தாங்காமல் பையன் நாரி நெளிய, உடலை வளைத்து, "என்ர அம்மா?" என்று வீரிட்டுக் கதறிக்கொண்டு முற்றத்திலே தாயின் காலடியிலேயே சுழன்று விழுந்தான்.

"என்ர ராஜா, அழாதையடி, நான் பெத்த என்ர செல்லக் கிளியே, நீ இனி அழாதையணை, நான் தான் பாவியடி"

தாயின் பரிதாபக் கோலம் பையனின் நெஞ்சைக் கரைத்து விட்டது. அவன் "திக்"கிட்டுப் போய் வாயசைக்காமல் கிடந்தான்.

www.tamilarangam.net

அவள் மைந்தனை அணைத்து வைத்துக்கொண்டு மறுபடியும் அல றினாள்.

"என்ர ராஜனுக்கு நல்லா அடிச்சுப் போட்டேனோடி?"

"ஓம்"மா, நீதாம்மா போகச் சொன்னே"

அவள் இதயத்தில் ஈட்டி குத்தின மாதிரி விழுந்தது அந்தக் கேள்வி.

"ஆ என்ர ராஜா, நான் போகச் சொல்லேலயடா, இந்த வயிறு தான் அப்படிச் சொல்லுதடி, நான் என்ன செய்ய?"

அதுக்காவத்தாம்மா நானும் அண்டைக்குக் களவெடுத்தேன். நீ தான் "களவெடாதையடா"ண்டு "போதிச்சு" எனக்கு அடிச்சுப்போ ட்டியே"

அவளின் "சதுரம்" குலுங்கியது.

"பிறகு நீயே போகச் சொன்னாய். போனேன். இப்ப நீ அடிக் கேல, அடுத்தவன் பிடிச்சு அடிக்கிறானம்மா. இதெல்லாம் என்ன ம்மா?"

அந்தக் கேள்விக்கும் விடை தெரியாமல் அவள் நெஞ்சு சாம்பி ற்று.

தான் பெற்ற சின்னஞ் சிறுவனின் பூதாகரமான அந்தக் கேள்வி க்கணைக்கு அவள் அப்போதும் பதில் சொல்லாமல் "தறு தறு" வென்றுமுழிசிக் கொண்டிருந்தாள்.

அதற்குப் பதிலாக அப்போது அவளின் கண்களில் கண்ணீர் தான் துளும்பித் தெறித்தது.

"வளவுக்காரன் அடிச்சது எனக்குத்தானே நோகுது. அதுக்கு நீ ஏனம்மா அழுகிறே?"

"டியே ராஜா, நான் இப்ப உனக்காக அழேல்லையடி. இந்த உலகத்தை நினைச்சுத்தான் அழுகிறேன்ரா"

ராஜன் சற்று நிதானம்மாக யோசித்தான். அப்போது அவன் முகத்தில் ஒரு வெறுப்புத் தட்டியது.

"சரிதானம்மா, இது உலகமில்லை. பெரும் "நரக"ம்மா. இந்த நரகம் எப்ப அழியும்மா?"

சிறுவனுக்கு வந்த ஞானம் தாயின் நெஞ்சைக் குலுக்கியது.

"ஆ, என்ர அப்பனே,நீ என்ர பிள்ளையில்லையடா. தெய்வமாய் வந்து பிறந்த உன்னைப் பாவி நான் தெரியாமல் அடிச்சுப் போட் டேனே, ஐயோ....!""

அந்த அந்தகார நிலையையும் பொருட்படுத்தாமல், அவன் அந் தக் குரலை ஊடறுத்தவாறு தாயைப் பார்த்துக் கேட்டான்.

"அம்மா, நான் களவெடுத்தது பாவமா?"

www.tamilarangam.net

"இல்லை ராஜா...."

திணறிய வாய் உப்பி அடங்க, அதை ஆமோதிக்கும் தோரணையில் தலையை ஆட்டிக் கொண்டு "ஓ"வென்று குரல் வைத்தவண்ணம், தான் பெற்ற அந்த தெய்வத்தை அள்ளி எடுத்துக் கட்டியணைத்துக் கொஞசினாள் தாய்.

ஆனால்....?

அந்த அழியாத நரகத்தில், இந்த இரண்டு ஜீவாத்துமாக்கள் அன்று இரவும், காய்ந்த வெறுங்குடல்களோடு தான் குறாவிக் கிடந்தன.

பையன் சொன்ன அந்த நரகம் இன்னும் அழியவில்லை.



## மணிக்கதைகள்

பெருமை 2.

"நான் எழுந்து கூவித்தான் பூமி விடிந்தது" என்றது சேவல்.

"இல்லை, நான் பறந்து கூவியே சூரியன் உதித்தது." என்றது குயில்.

"அப்படியல்ல, நான்"காகா" என்று கத்தியே ஆதவன் .உதித்தான்" என்றது காகம்

"முட்டாள்களே, உங் களால் சூரியன் உதிக்கவில்லை, அது உதிக்கும்போது நீங்கள் விழித்துக் கொண்டீர்கள். அதுதான் உண்மை என்றது கழுதை.

www.tamilarangam.net

# மலையக மக்கள்

**ரஞ்சினி**

கொட்டும் மழை
வாட்டும் குளிர்
ஏங்கிய நெஞ்சு
கூடையைச் சுமக்கும்
கூனல் விழுந்த முதுகுகள்....

அட்டைகள் இரத்தம் உறிஞ்ச
எலும்பும் சதையுமாய்
விழி நீர் சிந்தும்
மலையகப் பாட்டாளிகள்!

வாழ்க்கையில் தொலைத்த
வசந்தம்
தேயிலைச் செடிகளில் துளிர்க்கும்

மலையகம் செழிக்க
உழைத்தவர்களோ
பட்டினியில் நாளும்,

உழைத்த கரங்களின் வலிமை எல்லாம்
மண்ணுக்குள் உரமாகிப் போவதற்கல்ல,
அதன் வலிமையை உணர்த்தும்
காலம் வந்தால்
மாற்றம் நிகழாமல் விடுவதுமல்ல

---

**அட்டைப்படம்**

தொழிலாள வர்-
-க்கத்தின் புரட்சிகர மேதின எழுச்சியை நினை-
வூட்டும் முகமாக.......

— ஓவியம்: சாம்ஸன் —

www.tamilarangam.net

# "PIGALLE" விருந்து.....

**பாண்டியன்**

இரைந்து, வளைந்து வந்த சுரங்க வண்டி இரைச்சலுடன் நின்றது ஆட்டுப் பட்டிகளைப் போல் வந்த ரசிகர் கூட்டம் முடிந்து போன புதிய படமொன்றை விமர்சித்தவாறே வண்டியை முற்றுகையிட்டனர் ஏதேதோ கிறுக்கல்களுடன் கூடிய அந்த இரண்டாம் வகுப்பு பெட்டியில் அபாய சங்கொலியை போல விமர்சித்துக் கொண்டனர்.

"அவளென்ன பொம்பிளையா? அவனிலும் பிழைதான் காதலென்றால் கருகப்பூலையா.........?"

"தான் காதலிக்காத ஒருவனோடு அவள் எப்படி வாழ்க்கை நடத்த முடியும்? என்று வலிப்பு நோய் வந்தவனைப் போல திடீரென்று அருகேயிருந்தவனிடம் சூட்டி கேட்டான். பிரகாசமான கண்களுடைய கறுப்பு ஜக்கட் போட்ட அவன் பெட்டியின் மூலையை பிடித்தபடியே தான் புதுமையானவை என்று நினைத்ததை கேட்கத் துடித்தான்.

"பெண்ணும் மனிதம்பிறவிதான். ஆணைப் போலவே அவளுக்கும் உணர்ச்சிகள் உண்டு. அவள் தன்னுடைய கணவனைக் காதலிக்கவில்லையென்றால் என்ன செய்ய முடியும்?".

"கணவனைக் காதலிக்க வில்லையா?" என்று தன்னுடைய புருவங்களையும் உதடுகளையும் சுழித்துக் கொண்டு கடுமையான குரலில் அருகிலிருந்தவன் கேட்டான்.

"நடத்துகிறபடி நடத்தினால் கணவனைக் காதலிப்பாள்"

இந்த எதிர்பாராத விவாதம் சூட்டிக்கு மிகவும் பிடித்திருந்தது. அந்தப் பேச்சில் தனக்குப் பங்கு இல்லாமற் போய்விடக் கூடாது என்று கவலைப்படுவனைப் போல பேசத் தொடங்கினான்.

"நீங்கள் முக்கியமான விடயத்தைப் புரிந்து கொள்ளத் தவறிவிட்டீர்கள். காதல் இல்லையென்றால் அது திருமணமேயல்ல. காதல்தான் திருமணத்தைப் புனிதப் படுத்துகின்றது. காதலால் புனிதமடைந்த திருமணம் ஒன்று மட்டுமே உண்மையானது.

அருகிலிருந்தவன் இதைக் கேட்டுக் கொண்டிருந்த போது புன்னகை செய்தான். அவன் இந்த வாக்கியங்களை எதிர்காலத்தில் பயன்படுத்துவதற்காக இயன்றவரை அவற்றில் பலவற்றை மனப்பாடம் செய்ய முயற்சித்துக் கொண்டிருந்தான்.

சூட்டியின் பேச்சுக்கு இடையில் ஏதோ ஒரு சத்தம் கேட்டது சிரிப்பையோ அழுகையோ அடக்கிக் கொள்வதைப் போல அந்த ஒலி இருந்தது. அனைவரும் வேகமாகத் திரும்பிய போது கூச்ச

www.tamilarangam.net

மான முகச்சவரம் செய்யாத நீண்ட நாட்களுக்கு முன்பு தற்செயலாக ஒரு தடவை குனித்தவராக ஒருவர் காணப்பட்டார். அவருடைய வலதுபக்க நடுப்பல் முன்னுக்குத் துருத்திக் கொண்டிருந்தது, சூட்டியின் பேச்சில் அக்கறை கொண்டவராக அவர்களுக்குப் பக்கத்தில் வந்து விட்டதை யாரும் கவனிக்கவில்லை. அவர் தனது ஆசனத்தின் மீது கைகளை வைத்து நின்று கொண்டிருந்தார். மிகவும் பதட்டமடைந்ததைப் போல முகம் சிவப்பேறியிருந்தது. அவரது கன்னங்கள் துடித்துக் கொண்டிருந்தன.

"காதல்... எந்தக் காதல்...? திருமணத்தைப் புனிதப்படுத்துகின்ற காதல் என்பது என்ன? என்று அவர் நாக்குமுறிப் பேசினார்.

அவர் உணர்ச்சி வசப்பட்டிருந்ததைப் பார்த்த சூட்டி பதமாகவும், கவனமாகவும் பதிலளித்தான்.

"ஒரு ஆணுக்கும் பெண்ணுக்குமிடையே அத்தகைய ஒரு உண்மையான காதல் இருந்தால் திருமணம் சாத்தியம்" என்றான்

"சரி, உண்மையான காதலை நாம் புரிந்து கொள்வது எப்படி?" என்று அவர் தயக்கத்தோடும் தன்னுணர்ச்சியோடும் புன்சிரிப்புடன் கேட்டார். அவர் தன்னுடைய பெயரை நகுலேஸ்வரனோ நகுலசீலனோ என்றோ ஏதோ ஒரு நகுலுடன் சேர்த்து அறிமுகப்படுத்திக் கொண்டார்.

"உண்மையான காதல் என்பது என்னவென்று ஒருவருக்குமே தெரியாது" என்று அந்த உரையாடலை முடிவுக்கு கொண்டு வரும் விருப்பத்துடன் சூட்டி கூறினான்.

"எனக்கும் தெரியவில்லை. நீங்கள் எப்படிப் புரிந்து கொள்கிறீர்கள் என்பதை வரையறுத்துச் சொல்வது அவசியம்" என்று நகுலியர் கூறினார்.

"காதல் என்பது மற்ற எல்லோரைக் காட்டிலும் ஒரு குறிப்பிட்ட ஆணையோ அல்லது பெண்ணையோ அதிகமாக விரும்புவதைக் குறிக்கும்" என்றான்.

"அந்த அதிகமான விருப்பம் எவ்வளவு காலத்துக்கு இருக்கும் ஒரு மாதமா? இரண்டு நாட்களா? அரை மணி நேரமா? என்று அந்த முப்பது வயது மதிக்கத்தக்க நகுலியர் சிரித்துக்கொண்டே கேட்டார்.

"அவசரப்படாதீர்கள், நீங்கள் முற்றிலும் வேறு எதைப்பற்றியோ பேசுகிறீர்கள்"

"இல்லை, நான் அதேவிடயத்தைப் பற்றித்தான் பேசுகின்றேன்"

"எவ்வளவு காலத்துக்கா? மிகவும் நீண்ட காலத்துக்கு சில சமயங்களில் வாழ்க்கை முழுவதற்குமே" என்று ஒரு பிரெஞ்சுக் கார

www.tamilarangam.net

னைப் போன்றே இரு தோள்களையும் குலுக்கிக் கொண்டே சூட்டி பதிலளித்தான்.

"ஆனால், அந்த மாதிரி இன்று பார்த்தோமே சினிமாக்களில் தான் நடக்கிறது. வாழ்க்கையில் இல்லை. வாழ்க்கையில் ஒருவர் மீதுள்ள அதிகமான விருப்பம் அபூர்வமாக வருடக்கணக்கில் நீடிக்கலாம். ஆனால் பெரும்பாலும் அது சிலமாதங்களுக்கும் சில சமயங்களில் சில வாரங்கள் அல்லது நாட்கள் அல்லது மணிகளுக்கும் மட்டுமே இருக்கும்" என்றார்.

தன்னுடைய கருத்து எல்லோருக்கும் அதிர்ச்சியைக் கொடுக்கின்றது என்பது அவருக்கு புரிந்திருக்க வேண்டும். அப்படி அதிர்ச்சியைக் கொடுப்பது அவருக்கு திருப்தியாகவும் இருந்திருக்க வேண்டும்.

"ஒரு அழகான பெண்ணைப் பார்க்கும்போது நீங்கள் குறிப்பிடும் உணர்ச்சி ஒவ்வொரு மனிதனுக்கும் ஏற்படுவதுண்டு. இதை நீங்கள் காதல் என்று அழைக்கிறீர்கள். அது அபத்தம். எப்படிப் பார்த்தாலும் இரண்டு நபர்களுக்கிடையில் காதல் என்ற உணர்ச்சி இருக்கின்றதே அது மாதக் கணக்கில் வருடக் கணக்கில் அல்ல. வாழ்க்கை முழுவதுமே நீடிக்கின்றது. இல்லையா?.

"அப்படியல்ல, ஒரு ஆண் ஒரு குறிப்பிட்ட பெண்ணைத் தன் வாழ்க்கை முழுவதுமே நேசிப்பது சாத்தியம் என்று ஒத்துக் கொண்டாலும் அந்தப் பெண் வேறொருவரை நேசிப்பதற்கு அதிகமான சாத்யம் உண்டு. இந்த நிலைதான் உலகத்தில் எப்போதுமே இருந்திருக்கின்றது.

இப்போது நகுலியர் தனது இருக்கையை மாற்றி இரண்டு காலையும் நேரே நீட்டினார். அதே தினுசுடன் ஒரு கொட்டாவியும் விட்டுக் கொண்டார். அவருடைய மஞ்சள் படிந்த ஒழுங்கற்ற முறையில் அமைந்த காவிப் பற்கள் சூட்டியின் கண்களை தட்டிச்சென்றன.

"அப்படியானால் அது பரஸ்பர உணர்ச்சியாக இருக்கலாம். ஆனால் நீங்கள் உடற் பசியை மட்டுமே பேசுகிறீர்கள். கருத்து ஒற்றுமையல்ல. ஆத்மீக ஒற்றுமையால் காதல் ஏற்படுவதுமுண்டு. இல்லையா?" சூட்டி முதன் முறையாக முகத்தை துடைத்துக் கொண்டான்.

"ஆத்மீக இணைப்பு, கருத்து ஒற்றுமை" என்று நகுலியர் திருப்பி சொன்னார். முன்பு போல அழுகையோ சிரிப்பையோ அடக்குவது போன்ற ஒலி அவரிடம் வெளிப்பட்டது.

"நான் பச்சையாகப் பேசுவதற்கு என்னை மன்னியுங்கள்" அப்படியானால் அவர்கள் ஒன்றாகப் படுக்க வேண்டியதில்லையே? கரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

த்து ஒற்றுமை ஒரே படுக்கையில் புரளுவதற்கு இட்டுச் செல்வதாக நாம் கேள்விப் பட்டிருக்கின்றோமா?" என்று அவர் கூச்சமில்லாமல் வாயை ஒரு பக்கம் கோணலாக்கி சிரித்தபடி கேட்டார்.

"அன்றாட நிகழ்ச்சிகள் உங்கள் கருத்தை மறுக்கின்றன. ஆனால் தாம்பத்ய உறவுகள் நிகழ்கின்றன. மனித குலம் பெரும்பான்மையாக இப்படித்தான் வாழ்கின்றது. அவர்களில் பெரும்பான்மையினர் தங்களுடைய கடைசி நாட்கள் வரை நேர்மையான இல் வாழ்க்கையை நடத்துகின்றார்கள்.

"திருமணம் காதலை அடிப்படையாக் கொண்டது. என்று முதவில் சொன்னீர்கள். உடற்பசியைத் தவிர வேறுவிதமான காதல் இருக்கின்றதா என்று என்னுடைய சந்தேகத்தைத் தெரிவித்த பொழுது திருமணத்தைச் சுட்டிக்காட்டி காதல் இருப்பதை நிருபிக்கிறீர்கள். இந்தக் காலத்தில் திருமணம் என்பது மோசடியைத் தவிர வேறு ஒன்றுமில்லை. திருமணத்தில் உடல் இன்பத்தை தவிர வேறு எதையுமே பார்க்காமல் நம்மவர் திருமணம் செய்து கொள்கின்றார்கள். எனவே அது மோசடி அல்லது பலாத்காரம் என்றாகி விடுகின்றது. கணவனும் மனைவியும் உண்மையில் பல தார வாழ்க்கையை நடாத்தியபோதிலும் தாங்கள் ஒரு தார வாழ்க்கையை நடாத்துவதாக நினைக்கும்படி மற்றவர்களை ஏமாற்றுகின்றார்கள். பெரும்பாலானவர்களின் வாழ்க்கையில் இதைப் பார்க்கலாம். கணவனும் மனைவியும் தங்கள் வாழ் நாள் முழுவதும் வீண் சம்பிரதாயங்களைத் தங்கள் மீது சுமத்திக் கொண்டு ஒருவரை ஒருவர் வெறுக்கின்றார்கள். பிரிந்து போக விரும்புகின்றார்கள். எனினும் அவர்கள் இன்றும் சேர்ந்தே வாழ்கின்றார்கள். இதன் விளைவாக ஏற்படும் வர்ணிக்காக முடியாத சித்ரவதை அவர்களை உள்ளூரமாய்க்கின்றது. தற்கொலை செய்ய தூண்டுகிறது. தங்களையும் மற்றவர்களையும் கொலை செய்யவும் தூண்டுகின்றது." என்று அவர் மிகையான உணர்ச்சியுடன் பேசினார்.

"ஆமாம், இல் வாழ்க்கையில் நெருக்கடியான சம்பவங்கள் ஏற்படுகின்றன என்பதில் சந்தேகமில்லை"

இந்த உணர்ச்சிகரமான, நாசூக்கில்லாத உரையாடலை இதோடு நிறுத்திவிட விரும்பினான். பின்பு "அதற்கென்ன அதாவது.. " என்று தொடங்கியபோது என்ன சொல்ல விரும்பினான். என்பது அவனுக்கே தெரியாது.

**தொடரும்.**

www.tamilarangam.net



# ஜாதிகள் இருக்குதடி....

எஸ்.புவனன்

- ஹலோ!...
- உஃவி, கீத்தள பறே!
- உதுகளிலை மட்டும் குறைச்சலில்லை, ஒண்டு ரெண்டு சொல்லுகளை வைச்சுக்கொண்டு...
- எட ஜம்பு சொல்லு, என்ன இருந்தாப்போல,
- படுத்திட்டியளோ?
பகிடியே விறாய், இஞ்ச சனங்கள் கட்டுக்கே வரேல்ல "சமர்" தொடங்கிட்டுதல்லே,மேயப்போட்டுதுகள். இனிக் கடசி மெற்றோவிற்குத்தான் ஒரு மாதிரி தடக்கி விழுந்து வந்து சேருங்கள்.
- உனக்கென்ன இண்டைக்கு வேலை வெள்ளன முடிஞ்சுதோ
இண்டைக்கு "செவ்" இல்லை மச்சான்,பிறகு தெரியும்தானே! அல்பிறேற்றனும் பிடிக்கேல்லை ஒடி வந்திட்டன். அந்த "அல்பிறேற்ரர் மச்சான் "சவப்பா","செவ்"வுக்கும் சொன்னன், பத்து றோனுக்கும் சொல்லிப் போட்டன், அவங்க கவனிக்கிறாங் களில்லை,நான் கிடந்து மாரடிக்கிறன், அதடப்பா...
- இஞ்ச உன்ர புராணத்தை நிப்பாட்டு, நான் நேரடியாக விசயத்திற்கு வாறன்.
- ம்..சொல்லு ஒரு செக்கன் பொறு, அடுப்பில கறி இறக்கிவைச்சிட்டு வாறன்.
- சரி சொல்லு.
- அது சரி, உன்ர தங்கச்சியும் இவன் தேவனும் "லவ்"வெண்டு அறிஞ்சனான், கலியாணமும் நடக்குமெண்டுதான் சந்தோசப்பட்டனான், ஆனா நீ என்னென்னவோல்லாம் கதைக்கிறியாம்.
- மச்சான்,ரெலிபோனுக்கால தேவையில்லாத விசர்க்கதையள் கதையாத,சரியா.
- என்னடப்பா, நான் அறிஞ்சதைக் கேட்டன், இதென்ன விசர்கதை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

- இல்ல,கொஞ்சம் யோசிச்சுப் பார், இதுகள் நடக்கக் கூடிய விசயமே. சும்மா நாலு பேர் சாதியில்லை, சமயமில்லையெண்டு எழுதுவினம், கதைப்பினம் ஆனா நடைமுறையில உதுகளேல்லாம் சரிப்பட்டு வருமே.அந்தக் காலத்தில சாதியளை காரணங்களோட தானே பிரிச்சு வைச்சவை, அதுகளை நாங்கள் ஒருக்காலும் உடைக்கக் கூடாது.

என்ன காரணங்களோட?

???...

- லிங்கம் சும்மா கதைக்கக் கூடாது. ஒவ்வரு விசயத்துக்கும் காரணம்,அர்த்தம் இருக்கவேணும்.இல்லாம செய்யக் கூடாது.கதைக்கக்கூடாது.அந்தக் காலத்தில கொஞ்சப் பேர் முந்திட்டாங்கள் பரம்பரை பரம்பரையாக ஏமாத்திதக் கொண்டு வாறாங்கள்.

- ஏமாறுறவையள் இருக்கிறவரைக்கும்...

- ஹி...அதை நீ சொல்கிறாய்.

இப்ப உன்னைப் பார்.நீ இவ்வளவு படிச்சிருந்தும் விசயங்களை ஏன் எதுக்கெண்டு யோசிச்சுப் பார்க்கிறாயில்லை. "பொம்மை" மாதிரி இருக்கிறாய். நாட்டுப் பிரச்சினையளுக்கும் உன்னைப் போல ஆக்கள்தான் காரணம். ஏதோ வாய்ப்பாடு போல வாழ்ந்து போட்டு போக நிற்கிறாய்.

இது விஞ்ஞான யுகமடா, ஒவ்வொரு விசயத்துக்கும் அர்த்தங்கள் இருக்கு,இருக்கவேணும். சமுக விஞ்ஞானம் இண்டைக்கு அதின்ர மூலவர்களையே விமர்சிக்கிற அளவுக்கு உலகத்தில வளர்ந்துபோயிருக்கு.ஆனா சமுக விஞ்ஞானமெண்டால் என்னெண்டு தெரியாத நிலையில் நாங்கள் இருக்கிறம். நினைக்கேக்க..:சமயங்கள் கூட மனுசனாலதான்....இதுகளைக் கொஞசம் ஆழமாய்க் கதைச்சால் அறுக்கிறன் எண்டுவாய்.

- இப்ப மட்டும் வேற ஏதோ செய்யிறியே! பரவாயில்லை சொல்லு
- லிங்கம் விசயத்துக்கு வாறன்.
- ம்...சரி
- உன்ர தங்கச்சின்ர விசயத்தில நீ நடந்து கொள்ளுறது எனக்கு கொஞ்சம் கூட பிடிக்கேல்ல.
- அப்ப என்னை என்ன செய்யச் சொல்கிறாய்!
- கலியாணத்தை செய்து வை எண்டுதான் சொல்றன்.
- ஆருக்கு தேவனுக்கோ?.
- பின்ன வேற யாருக்கு?.
- நீர் வலு சுகமாக சொல்லிப் போட்டீர் உம்மட கவுரமே குறையப்

www.tamilarangam.net

போகுது. நான் பரிசுக்கை வெளிக்கிட்டுத் திரியிறேல்லையே!. அதோட வேற ஊரெண்டாலும் பரவாயில்லை. ஒரே ஊருக்குள்ள, தேவன்ர இனசனம் எங்கட வீட்டுப் படியே ஏறிறதில்ல தெரியுமே உனக்கு, என்ர அப்பரைக் கண்டா தோழால சால்வை எடுக்கிறவங்களோட சம்பந்தமெண்டா...

- ஹலோ, மிஸ்டர் லிங்கம், கனக்க கதையாதேயும். இண்டைக்கு இப்படிக் கதைக்கிறீர். ஆனா கொஞ்சம் பழசுகளையும் யோசிச்சு பார்க்கவேண்டும்.
- என்ன பழசுகள்?.
- அதுதான் எண்பத்தி மூண்டு, எண்பத்தி நாலுகளை மறந்துபோனீர் தை மாதத்துக் குளிர், மைனஸ் செவினுக்கை பேளின் வந்திறங்கி ஜேமன்,பிரஞ்ச் போடர்களை கஸ்டப்பட்டுக் கடந்து பரிசுக்கு வந்தநேரம் உன்ர இனசனம்,நண்பர்கள்,"சாதிக்காரர்" உன்னைக் கண்டு ஒளிய,தெரிஞ்சும் தெரியாத மாதிரிப் போக, நீ ஒண்டும் விளங்காமல் பேயறைஞ்சமாதிரி முழுசிக் கொண்டு நிக்க, உன்ர கோலத்தைக் கண்டிட்டு,தானா ஓடிவந்து உன்னை தன்ர றூமுக்கு கூட்டிக் கொண்டு போகேக்க, தேவன் உனக்கு கடவுள்.. நாலு நாளா சாப்பாடுமில்லாமல் தவிச்சு வந்த நேரம் தேவன் சமைச்சுப் போட சாப்பிடேக்க அது அமிர்தம்..

அப்ப தேவன்ர இனசனம் படி ஏறிற,இறங்கிற ஞாபகமொண்டும் வரேல்ல,பிறகு பொலிஸ், ஏ.என.பி, சோசல் எண்டு அவன் கூட்டிக் கொண்டு திரியேக்க "உன்னைப் போல ஒருத்தனை நான்....

அன்பொழுகின வசனங்கள். ஏன் போன வருசம் கூட அவன்ர "பாட்டி" ஒண்டிலை "வைற்"றாகக் தண்ணியைப் போட்டிட்டு தேவனைக் கட்டிப் பிடிச்சு "உங்களையெல்லாம் சிலோனில எவ்வளவு கொடுமைப் படுத்தியிருக்கிறம் ஆனா அதுகளையெல்லாம் பொருட்படுத்தாம நீ எனக்கு செய்யிற உதவியள்".. கண்ணீரோட நீ சிந்தின உள்ளத்தை உருக வைக்கிற வசனங்கள்.. அந்த நேரம் என்னையும் மெய்சிலிக்கத்தான் வைச்சிது.

எல்லாத்துக்கும் மேலால உன்ர தங்கச்சி பரிசுக்கு வந்த நேரம் நீ வேலை,வேலையெண்டு அலைஞ்சு கொண்டு சோசல்,ஏ.என்.பியளுக்கு தேவனோடதானே அனுப்பினனி.

அதுதான் உதவி தேவைப்படுகிற நேரங்களில சாதி(?) கவுரவம் பார்க்க மாட்டியள், இண்டைக்கு உனக்கு பெரிசா பிரச்சினையள் ஒண்டும் இல்லை. உதவியள் தேவையில்லை. கையில் "கார்ட்",நிரந்தர வேலை,வசதியான வீடு, இப்ப உனக்கு ஒரு சமூக அந்தஸ்து தேவைப்படுகுது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**ஜாதி சமயம் பார்க்க வெளிக்கிறாய், உன்னை நினைக்க வெக்க மாக இல்லை!**

**- ஐம்பு, தேவையில்லாத கதையள் கதைச்சால் வீணா (வ்)றெஞ்சிப் தான் உடையும்.**

**- ஆ ,போஃம்! எனக்கெண்டா இதுகள் தேவையில்லாத கதையளா ப்படேல்லை.**

**- அப்படியெண்டா வை றெவிபோனை, ஓ.கே, குட்நைற்.**

**!!!**

★

# மணிக்கதை

பொம்மைகள் 1.

வாசகர் ஒருவர் விரித்த சஞ்சிகையில் மூழ்கிப் போயிருந்தார். அவர் வாசித்த தோரணையில, "ரொம்பப் பலமான சிந்தனாவாதியாக இருக்க வேண்டும்" என்று தோன்றிற்று.

சாடையாக எட்டிப்பார்த்தேன்

"பொம்மை"

எனக்கு சிரிப்பு வந்தது.

"என்ன சிரிக்கிறீர்?" என்று கேட்டார்.

"சினிமாப் பொம்மைகளையும், சினிமா நடிகர்களையும் படித்தால் நிட்சயம் "மூளை விருத்தியாகும் ஆகையால், உந்தப் பிடியை விடாதேயும்" என்றேன்.

அவர் முகத்தில் நெய் வழிந்தது.

"பொம்மை"யை நைசாக மடித்து மூடிய அவர், மெல்ல நடையை கட்டினார்.

www.tamilarangam.net

# உண்மைக் கலைஞன் றிச்சார்ட் டி சொய்சா

ரி.றோசான்

நாட்டில் வியாபித்த காட்டு இருட்டின் நடுவே ஒளி வீசிய அந்த தீபம் அணைக்கப்பட்டு விட்டது. அராஜகவாதிகளின் கோரக் கரங்களில் றிச்சார்ட் டி சொய்சா என்ற உன்னத மனிதன் அழிக்கப்பட்டு விட்டான். இம்மனிதனது மரணம் கூட வலிமையானதுதான் என்பதனை கொலையாளிகள் அறிந்திருக்க முடியாதுதான். ஆனால் யார் இந்த மனிதன்! எதற்காக மரணித்தான்? என்ற காலத்தின் கேள்விகளுக்கு இவர்கள் பதில் சொல்லியே ஆகவேண்டும்.

சென்,தோமஸ் கல்லூரியின் பழைய மாணவனான றிச்சார்ட் திறமையான ஒரு நடிகன், தரமான செய்தி வாசிப்பாளன், பத்திரிகையாளன் என்று மட்டுமே சாதாரண இலங்கையர்கள் அறிந்திருந்தனர். ஆனால் அவன் அதற்கப்பாலும் சென்று குறிப்பாகப் பத்திரிகைத்துறையில் தனது திறமையையும் ஆற்றலையும் அசாதாரணத் துணிவையும் வெளிப்படுத்தினான். புதியதொரு உலகை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்த வேளையில் அவன் குரூரமாக வீழ்த்தப்பட்டான்.

சிந்திக்க மறுக்கின்ற பலர் வாழும் பாழடைந்த சூழலில் சிந்தித்துச் செயற்பட்ட இம்மனிதர்கள் சிறுபான்மையினரே. இவர்களது அழிப்புக்கள் உண்மையில் நாகரீக அழிவுகளின் நினைவுச் சின்னங்களே.

நாகரீக உலகில் நடமாடத் தகுதியற்ற கோழைகளினால் றிச்சார்ட் வீழ்த்தப்பட்டிருக்கிறான்.

மொறட்டுவக் கடல் அலைகள் ஓங்கி அலறிய வண்ணம் அவனை கரைசேர்க்க இன்னும் மௌனங்கள் தொடர்கின்றன.

சமூக, மற்றும் பொருளாதார உய்வுக்காகப் போராடும் மக்களின்பால் கரிசனை கொண்டு உழைத்த றிச்சார்ட் டி சொய்சாவின் உயர்ந்த இலட்சியங்கள் எனள்றுமே நிலைத்திருக்கும். அமைதியாக ஆரவாரமில்லாது செயற்பட்ட உண்மை மனிதன், அவனது தியாகம் தாய்நாட்டின் வரலாற்றில் ஆழமாகப் பதியும் என்பது நிச்சயமே.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## றிச்சார்ட் டி சொய்சா பற்றி ....

மாதக் கணக்காக, ஏன் வருடக் கணக்காகக் கூட உங்களைப் பற்றிய எத்தனை எத்தனை எண்ணங்கள் எனது மனதில் நிழலாடப் போகின்றன?. எனது வீட்டின் விறாந்தையில் ஒரு பாலே நடனக் காரராக,ஒரு சேக்ஸ்பியர் நாடகக்காரராக உங்கள் இனிமையான குரல் காட்சிகள், கனவுகள் எல்லாம் நிழலாடுகின்றன. சமீபத் தைய சில காலமாக, நாம் அச்சந்தரும் உலகில் வாழ்கிறோம் என்னைப் பொறுத்தவரை எமது "யுகாந்தய" திரைப்படம் போல நீங்கள் சைமன் கபலனாவின் புத்திரனின் மறுபிறப்பாகவே தோன் றுகிறீர்கள். உங்களது அந்தக் குரலை எந்த துப்பாக்கிக் குண்டும் அமைதியாக்கிவிட முடியாது. அது இன்று உலகம் முழுவதும் எதி ரொலிக்கின்றது. உண்மைக் குரல் என்றும் நிலைத்திருக்கும்.

-லெஸ்டா ஜேம்ஸ் பீரிஸ்

...."மௌனக்கழுகுகள் எமது வீரத்தை உண்ணும்போது" நாம் ஏன் ஒரு பக்கமாக ஒதுங்கியிருந்து இதனை அனுமதிக்கின்றோம் என எம்மை நாம் கேட்க வேண்டியுள்ளது. "கடல் உள்ளுக்குள் குமுறுகி ன்றது. அலைகள் கரையைத் தழுவுகின்றன".

இவ்வரிகள் றிச்சார்டிற்கு மிகவும் பிரியமானவை. இவை கௌத மாலாவைச் சேர்ந்த கவிஞரான ஒட்டோ ரெனி காஸ்ரிலோவால் எழுதப்பட்டவை. அக்கவிஞரும் ஏறக்குறைய றிச்சார்டின் வயதிலே யே கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

குண்டா டிக்ஸிற்

இந்த மனிதரைப் பற்றி அறிந்திருப்பது நன் று.கடைசியாக நான் அவரைச் சந்தித்தபோது சிங்களப்படம் ஒன்றில் பிரதான பாத்திர த்தை ஏற்று நடிக்க முன்வருவீர்களா? என்று கேட்டேன். அதற்கு அவர் சிரித்துக் கொண்டே, "நான் வாழ்க்கையில் ஏதாவது உப யோகமானதைச் செய்யவே விரும்புகிறேன். மரங்களைச்சுற்றி ஓடு வதை விரும்பவில்லை." எனக்கூறினார். இப்போது இவர் மறைந்து விட்டார்.

டாக்டர் சரத் அமுனுகம

(லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ், டாக்டர் சரத் அமுனுகம, குண்டா டிக் ஸிற் ஆகியோரது குறிப்புக்கள் வீரகேசரி தினசரியிலிருந்து எடுக் கப்பட்டவை)

www.tamilarangam.net

# பரிஸ் - கடந்தகால இலக்கியப் பதிவுகள்

பரீஸ் நகரின் கடந்தகால இலக்கியப்பதிவுகளாகி எமக்கு எட்டிய விபரங்களைக் கீழே தொகுத்து தருகின்றோம்.

இவற்றுள் மாதந்தாந்த, இருமாத, காலாண்டு சஞ்சிகைகள் ஆண்டு மலர், கவிதைத் தொகுதிகள், சிறுக தைத் தொகுதிகள் என்பன அடங்குகின்றன.

எண்பதுகளின் ஆரம்பத்திலிருந்தே மேற்கொள்ளப்பட்டு வருகின்ற இவ் விலக்கிய முயற்சிகள் ஒரு தொடரற்றவையாக இருப்பினும் முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன என்பது மகிழ்ச்சிக் குரிய விடயமே.

சஞ்சிகை விபரங்கள்.

1.தமிழ் முரசு 2. எரிமலை 3.கண் 4. சிந்து 5. கலாச்சாரம் 6. நண்பன் 7. புதிய தென்றல் 8. தாயகம் 9. தேடல் 10. ஆதங்கம் 11. ஓசை 12. பள்ளம் • குமுறல்

கவிதைத் தொகுதிகள்

1. நாளை விடி பொழுதில்
2. தூரத்து விடிவெள்ளி
3. மண்ணில் தெரியுது வானம்

சிறுகதைத் தொகுதிகள்

1. மண்ணைத் தேடும் மனங்கள்
2. நம்பிக்கை நாற்றுக்கள்
3. தேசம் தாண்டிய நதிகள்

ஆண்டு மலர்

உன்னையே நீ அறிவாய்

மேலே குறிப்பிட்ட இவ் இலக்கியப் பதிவுகள்சம்பந்தமாக கருத்து முரண்பாடுகள் விமர்சனங்கள் இருப்பினும் நெருக்கடியான எம்மவர்களின் வாழ்க்கைச் சூழ்நிலைகளுக்கு மத்தியிலும் வியாபார நோக்கமற்ற முயற்சிகள் என்ற வகையில் இம்முயற்சிகள் வரவேற்கக் கூடியவையே.

www.tamilarangam.net

பரவலாக இம்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் இவை தொடர்ச்சியாக நிலையாக வெளிவர முடியாததற்குரிய அடிப்படை காரணிகளை ஆய்வு செய்து சரியான முறையில் சமூக வளர்ச்சிக்கு உந்துதலைக் கொடுக்க வேண்டியது சிந்திக்கக் கூடிய - சமூகத்தின் பால் அக்கறை கொண்டோரது கட்டாயக் கடமையாகும்

## முட்களின் மேல்

நாளைகள் குரோதமாய் என் வரவுக்காய்
காத்திருந்தாலும்
முட்களின் மேல் அபூர்வமாய்
பூத்திருக்கும் பூவுக்கானது
எனது காத்திருப்பு.
ரணங்களின் வலி மறந்து
கருணையை எதிர்நோக்குதலிலும்
அர்த்தப்படுத்த முடிகிறது வாழ்வை.
ஆயினும்,
ஜீவித்திருத்தலின் கொடுமையை
என்னவென்பது.
நட்சத்திரங்களின் ஜொலிப்பை
தென்னங்கீற்றின் மெல்லிய அசைவை
நாளத்தின் உள் உறையும் இசையை
தொலைத்துவிட்டேன்.
வெறுமனே வெளியை

வெறித்திருப்பதற்கும்
கண்கள் வலியற்றனவாகிவிட்டன.
எச்சத்தில் முளைத்து இரு பசுந்தளிரோடு
சுவரில் வேரோடி
வாழ்ந்திருக்கும் ஆலின் மகத்துவம் கண்டு
தெம்பு கொள்ள முடியாது.
நேற்றுகளின் கொடுமை
மறக்கக் கூடியவை.
இன்று
திகிலில் கழிகின்றது.
நாளைகள் குரோதமாய்
என் வரவுக்காய் காத்திருந்தாலும்
முட்களின் மேல் அபூர்வமாய்
பூத்திருக்கும் பூவுக்கானது
எனது காத்திருப்பு.

**ஹம் சத்வனி**

**நன்றி: பாலம்**

www.tamilarangam.net

# கோடீஸ்வரப் பிரபுவுடன் ஒரு சந்திப்பு

-நீ கழல்மயன்

ஒரு பீடிகை.

மிக நெடிய வரலாற்றினைக் கொண்ட உலகப் பிரச்சினைகளை மனசிருத்தியபோது, என்னில் உருவகமான ஒரு மனிதர் நீண்ட காலமாக என்னோடு சர்ச்சைப்படலானார். அவரோ ஒரு கோடீஸ்வரப் பிரபுவாகவே என் மனக்கண்ணில் தோன்றினார். கற்பனையில் தோன்றிய இந்தக் கோடீஸ்வரப் பிரபு நீண்ட காலமாகவே ஈடுபாடு கொண்டவர் போல் விளங்கினார். இவர்தம் பராக்கிரமங்கள், வீரதீர சாகசங்கள்,மதிநுட்பமான தர்க்கீகங்கள்,கலை இலக்கியம், அரசியல்,விஞ்ஞானம், வரலாறு,சட்டம், உளவியல்,பாலுணர்ச்சி, மனோதர்மம், மொழி,இலக்கணம் ஆகிய துறைகளில் மேதாவியாகத் திகழ்கின்றார். அன்றாடம் இந்தச்செய்திகள் வந்தவண்ணம் இருந்தன.

உலகத்தின் தலைவிதியை மாற்றி அமைத்த மாபெரும் புரட்சிகரச் சித்தாந்த மேதைகளையெல்லாம் நினைவிற் கொணர்ந்து, அத்தகையவர்களில் இவரும் ஒரு மேதையாக இருப்பாரோ? என்று யோசித்தபோது என் மனசு நெருடிற்று.

அந்தப் புரட்சிகர மேதைகள் புதிய உலகத்தைச் சிருஷ்டிப்பதற்காக மானுடத்தின் வெற்றியை நோக்கி மகத்தான தியாகங்கள் புரிந்தவர்கள் என்பதை அறிவேன். ஆனால் இந்த மனிதரோ பெரும் கோடீஸ்வரப் பிரபுவாகவருப்பதால், உலகத்தின் சகல செளகரியங்களும் உடையவராகவருப்பார் என்றும், இவர்தம் உணவு உடை,வாழ்விடம்,வாழ்க்கை யாவும் இவரை ஒரு தந்தக் கோபுர வாசிபோல ஆக்கியிருக்கும் என்று கற்பனை பண்ணியபோது இவரை ஒரு சாதாரண மானிடனாக கணிக்கவும் மறுத்தது.இவர் ஓர் அமானுஷ்ய மனிதராக இருப்பார் என்றும், இவர் தோற்றம் நம் புராண இதிகாசங்களில் வரும் பூதகணமாக இருக்கும் என்றும் அனுமானித்தேன். இப்பேர்ப் பட்ட மாபெரும் மனிதரை என்னால் அண்டமுடியுமா என்கிற ஐயம் என்னுள் குடைந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆண்டாண்டு காலமாக உலகத்தின் தலைவிதியை தமது காலடியில் கட்டி வைத்து சாம்ராஜ்யம் நடாத்திய ஆதிபத்தியத்தின் வாரிசான இந்தக் கோடீஸ்வரப் பிரபுவின் சொத்துக்கள் பத்துக் கோடி மக்கள் இருபது ஆண்டுகளாகச் சொகுசு வாழ்க்கையை ஓட்டப் போதுமானவை என்றால் பாருங்களேன். இந்தக் கோடீஸ்வரப் பிரபு பதின்மூன்று தொழிற்சாலைகளுக்கு அதிபதியாக இருக்கிறார் எனவும் பதினாறு விமானங்களில் மூன்றைத் தவிர ஏனைய விமானங்களை வாடகைக்கு விட்டிருக்கிறார் என்றும், சுமார் ஏழுலட்சம் தொழிலாளர்கள் இவர்தம் தொழிற்சாலைகளில் வேலை செய்கிறார்கள் என்றும், அந்தரங்க ஆலோசகர்கள் பதின்மூன்று பேர் தவிர, நவீன ஐந்திர சாதனங்களின் விற்பனைக்காக விசுவாசம் மிக்க உயர் அதிகாரிகள் இருநூறு போர் நாடு பூராவும் பணிபுரிகிறார்கள் என்றும் அறிய முடிகிறது.

ஒரு மனிதனைத் திணறவைக்கும் இந்தச் சொத்துடமைகளை இந்தப்பிரபு, எப்படித்தான் ஆண்ட அநுபவிக்கிறாரோ என்று வியப்புத் தெரிவித்த ஒரு பத்திரிகையாளனுக்கு "முன்னேற வேண்டும் என்ற ஆசையைவிட ஆண்டு அனுபவிக்க வேண்டும் எனற ஆவல் தான் முக்கியமானது" என்று ஒளிவு மறைவின்றிப் பதிலளித்திருக்கும் இந்தப்பிரபுவை மட்டுக்கட்ட எனக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை.

இப்பேர்ப்பட்ட இந்த மாபெரும் மனிதரான இந்தக் கோடீஸ்வரப் பிரபுவைச் சந்திதக்கப் போகிறேன். என்று முடிவு எடுத்த பின் தான் எனது அறிவு, ஆற்றல், சாமர்த்தியம், சாணக்கியம், தந்திரோபாயம் என்கின்ற படிமங்கள் அவருக்கு ஈடுகொடுத்து நிற்குமோ என்கிற சந்தேகம் எழுந்தது. கூடவே நடுக்கமெடுத்தது. இந்தச் சந்திப்புக்காக நான் செய்த ஏற்பாட்டைக் காட்டிலும், அவர் இந்தச் சந்திப்புக்கு ஒரு நாளை ஒதுக்கி அனுமதி அளிப்பதால் அவருக்குண்டான லாபவருமானத்தின் இழப்பு அப்படி பிரமாதமாக ஒன்றும் இல்லை என்பதும் ஒரு மகத்தான, நம்பமுடியாத செய்திதான் என்ன செய்வது?. சில மனிதர்களைப் பொறுத்தவரை நம்பமுடியாத செய்திகளையும் ஜீரணிக்கத்தான் வேண்டியிருக்கிறது. அந்த ரகத்தில் இந்தப்பிரபுவைச் சேர்த்தியாக்குகிறேன்.

கபாடம்திறமின்

கொடுகி விறைத்துப்போன என் சடல விறைப்பு இன்னும் எடுபடவில்லை. மெல்லிய ஊதந்காற்று வேறு மேனியுள் சிலாம்புகிறது. சீத



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அப் புகார் காற்றுடன் கலந்து காதுக் கணுக்குகளுள் புசுபுசுத்தது. தோட்டத்தைச் சுற்றி அமைந்த வர்ணப் பூக்களின் வாசனை மூக்கிற் கமழ்ந்து நறுமணம் வீசிற்று. முற்றிலும் மலர்ச் செடிகளாய் எழுப்பப்பட்ட மதிற்சுவர்கள் பங்களாவரை செங்குத்தாக நீண்டு செல்கின்றன. கோபுர வாசல்வரை பஞ்சுப்பொதிகளாகத் திகழும் கோடுகள் போல் அந்தப் பூ மதில்கள் அடர்ந்துள்ளன.

நிலை குத்தி நின்று தலை நிமிர்ந்து பார்த்தேன். வானளவிய கோப்பிசம். அந்தப் பங்களாவின் முன்று மாடிகளிலும் பக்கவாட்டு நிலையங்களிலும் எந்தச்சலனத்தையும் காணவில்லை. ஒரே அமைதி. சற்றுவேளை ஊமை கண்ட கனவின்போல் மிவாந்தி நின்றேன். 'அதிர்கின்ற வெடி முழக்கங்களை விட அமைதியான சோதங்கது மிகப் பயங்கரமானது' என்பதை இப்போது உணர்கிறேன்.

இந்தப் பெரிய பிரமாண்டமான பங்களாவில் பாரிய அமைதியான ஊமைத்தனம்,மயான நிலை சற்றுப் பயப்பிராந்தியை ஊட்டிற்று.

"ஒருவேளை இடம் மாறிவந்துவிட்டேனா?" என்று அழைப்பு மடலைப் பார்த்தேன். சாட்சாத் இதே பங்களாதான். வாசல் முகப்புவரை வந்து நாலா பக்கமும் பார்த்த என் கண்ணில் எந்த மனித நடமாட்டமும் தெரியவில்லை. இருந்தும் பவ்வியமாக வாசல்படிகள் தாவி ஏறி நின்று அழைப்புக் குமிழியை அழுத்தினேன்.

"ஆம் உள்ளே வாருங்கள்" என்ற இதமான குரல் திடுக்கிட வைத்தபோதும் என் மனசைக் குதுகலத்தில் ஆழ்த்தியது.

உளளே சென்றதும் 'இத்தனை தடல்புடல்களுக்குப் பிறகும் என்னை அவர் பணியாள்தான் வரவேற்பதா?' என்று என்னுள் கிளர்ந்த ஆதங்கத்தையும் காட்டிக் கொள்ளாமல் சாடையாகச் சிரித்தேன். அவர் பதிலுக்கு புன்முறுவல் பூர்த்தபடி சாதுவான குரலில் அதோ அந்தப் பூத்தோட்டத்தில் உள்ள கடைக் கோடியில் ஒரு சிறு குடிசை தெரிகிறதே அங்குதான் அவர் வசிப்பிடம்.அவர் தங்களை அங்கே அனுப்பி வைக்குமாறு எனக்கு பணித்துள்ளார். தயவு செய்து நேரே அங்கே செல்லுங்கள்" என்று சைகை காண்பித்தார்.

எனக்குத்துக்குவாரிப்போட்டது. என்ன அதிசயம், என்ன வேடிக்கை, என்ன விந்தையான மனிதர்? இந்தப் பெரிய கோடீஸ்வரப் பிரபு இந்தப் பிரமாண்டமான பங்களாவை விட்டு ஒரு சிறு குடிசையை வசிப்பிடமாக்கிக் கொண்டாரா? சிந்திக்கவே சிரமமாக இருக்கிறது. ஒருவேளை சித்தப்பிரமை பிடித்த மனிதராக இருப்பாரோ? என்று ஓர் ஐயம் என்னுள் குடைந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எனது வருகையை பணியாள் தொலைபேசியில் அறிவித்திருக்க வேண்டும். அவர் வாசலில் என்னை எதிர்கொண்டு நின்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார்.

நான் நினைவுகளையும் கனவிற் காண்பதில் விண்ணன். அந்த நன்னம்பிக்கைத்துவமே அவரைக் கண்டதும் அடியோடு பறந்துவிட்டது. ஒரு சிறு அம்சம் கூட நான் கற்பனை பண்ணிய மனிதரான அவரிடம் இருக்கவில்லை.

ஆளை வறுகி எடுத்தாலும் பத்துச் சிறங்கை சதை தேறாது. புடங்குகளின் என்புக்கூடுகளில் விறைப்பான தசைச் சோணங்கள் திட்டாகத் தொங்கிக் கிடக்கின்றன. புடைத்துக் கிடக்கும் நரம்புகள் தேக மடங்க வியாபித்துக் கிடக்கின்றன. வலிச்சானதேகம். நரைத்துப் போன செம்மயிர் கற்றைகளை மேவி வாரி விட்டிருந்தார். காதுகளில் தெம்பிய மயிர் பூஞ்சணமாக சிலிப்புக் கொண்டிருந்தது அறுத்துப் போட்ட பன்றி இறைச்சி மாதிரி அவர் சதிரம் குங்குலி வெண்ரத்தமாக தொளதொளத்துப் போய்க்கிடந்தாலும் வாலிப மிடுக்குத் துள்ளிற்று.

அவர் வயோதிபம் தெரியவில்லை. கருநீலவிழிகள் கமண்டலத்துள் இரு கண்ணாடி பேழைகள் போல் பளிச்சிட்டன. நெடிதாக ஒட்டி உலர்ந்த வலிச்சல் உடம்புமிக கெட்டியாக இருக்கிறது. அவர்தம் வலிச்சல் தேகத்தில் நரம்புகள் புடைத்துக் கொண்டிருந்தன. ஏறு நெற்றியின் கீற்றுக் கோடுகள் கமண்டல உச்சிவரை தாவிக் கிடக்கின்றன. ஒரு சிருஷ்டி இலக்கிய கர்த்தரைப் போல அவர் தம் பார்வை குண்டூசி மாதிரி என்னிற் பாய்ந்தது. சுமார் அறுபது வயசைத் தாண்டியிருப்பார் என்ற போதும் அவர்தம் கச்சிதமாய் சுறுசுறுப்பான கிருத்தியங்கள் ஒரு விடலைக்குரிய பாவனைகளை நினைவூட்டின.

"நீங்கள் மதுபானம் அருந்துவதுண்டா?" இந்தப் பெரிய பிரபுவிடமிருந்து எடுத்த எடுப்பிலேயே இந்த மாதிரி ஒரு கண்ணியமிக்க உபசரிப்பு கிடைக்குமென நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

நாணமாகிய உணர்வுடன் "இருந்துவிட்டு எப்போதாவது அருந்துவதுண்டு..." என்றேன்.

அவர் கலகலத்துச் சிரித்தார். அவர் சிரிப்பு என் பதலில் திருப்தி கொள்ளாதவராகக்காட்டிற்று.

கொஞ்சம் வெட்கமாக இருந்தது. நான் சமாளித்துக் கொண்டதை அவர் கவனித்தபோதும் அதனைக் காட்டிக் கொள்ளாமல் சிரித்தார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"உண்மையைச் சொல்லப் போனால் மது, மாது,சூது" இந்த மூன்றையும் தன்னிச்சையாகத் தீண்டாத எந்த மனிதனும் உலகத் தில் இல்லை. மேற்கத்தைய ஐரோப்பிய நாடுகளில் நாம் இவ ற்றை யதார்த்த நிலைப்பாடாகக் கணித்து இதனை ஒரு மேன்மை க்குரிய செயலாகவும், இதனால் வெட்கப்படுவதற்கு ஒன்றும் இல் லையென்றும் கருதுகிறோம்.

உண்மை என்னவென்றால் தங்களைப் போன்ற கீழைத் தேய மனிதர்கள் இவற்றையெல்லாம் வாழ்க்கையின் வெறுக்கத் தக்க அருவருப்பான கிருத்தியங்களாகவும், இவற்றால் தங்கள் வாழ்க்கை மாசுபடுத்தப் படுகின்றதாகவும் கருதுகின்றார்கள். இவர் கள் இப்படிக் கருதுவதால் தங்களுக்கு இயல்பாக உண்டாகும் ஆசைகள், உணர்வுகள், ஆசாபாசங்கள் யாவற்றையும் இழந்தவர் கள் போல் பாசாங்கு காட்டிக் கொண்டே இதேசெயல்களில் மறை முகமாக, நாசுக்காக இறங்கிவிடுகிறார்கள். இந்தக் கிருத்தியங் கள் அவர்கள் வாழ்க்கையில் இப்போது சம்பிரதாயங்களாகி விட் டன. இவை பாவத்தின் வாசல் என்று சொல்லிக் கொண்டே இந் தப் பாவத்துக்குள் தம்மை அன்றாடம் உட்படுத்தாத மனிதர்களை நீங்கள் எங்கேயாவது கண்டதுண்டா? உண்மையில் வாழ்க்கை சம்பிரதாயமல்ல, சம்பிரதாயம் வாழ்க்கையுமல்ல. சம்பிரதாயம் வாழ்க்கையானால் அந்த வாழ்க்கை முழுக்க முழுக்க போலியா னது. இந்தப் போலிவாழ்க்கை எங்களிடமிருந்து எப்போதோ விடை பெற்றுப்போய்விட்டதால்தான் நாங்கள் உலகிலேயே நாகரிகத் தின் உச்சத்திற்கு வந்திருக்கிறோம்..."

கொஞ்சம் கூடக் கூச்ச நாச்சமின்றி வாழ்க்கையைப்பச்சையாகச் சொல்லும் திராணி இந்த மனிதரிடம் எப்படி உண்டாயிற்று? நான் நினைத்ததைப் போல் இவர் அப்படி ஒன்றும் சோமாறிப் பேர்வழி அல்லர் என்று தெரிகிறது. 'இன்றைய சந்திப்பில் நான்தான் முட் டாள்தனமாக நடந்து கொள்ளவேண்டி வருமோ?' என்ற கிலி எனக் குள் சூல் கொண்டது என்றாலும், நான் கொண்ட போதத்தின் நிபு ணத்துவம் என்னை உசுப்பிற்று. எனவே, ஒரு தத்துவ சித்தாந்த பேதை போல சிரித்துக் கொண்டு, அதேவேளை வெறும் பேயன் போல் பாவனை காட்டிக் கொண்டு சம்பாசணையில் ஈடுபடலா னேன்.

மது போதை ஊட்டும் வஸ்து, மங்கை இன்பந்துய்க்கும் ஊற்றுகண் சூது ஆவலைத் தூண்டி வாழ்வை அழிக்கும் நச்சிரம் என்றும் இவ ற்றை இடம்,பொருள்,ஏவல் அறிந்து கையாளும் வாழ்க்கைமுறையே

www.tamilarangam.net

அந்தப் பண்பாடே எங்கள் கிழைத்தேய நாகரிகம் என்றும் இவ்வாறெல்லாம் எடுத்து விளக்கி வைக்க எத்தனிக்கையில், அவர் மன்னிக்க வேண்டும் நீங்கள் புகைப் பிடிப்பதுண்டா?" என்று கேட்டுக் கொண்டே, மதுப்புட்டிகள் மத்தியில் உள்ள டம்பரில் ஊதிய சிகரட்சாம்பலை நுனி விரலால் தட்டினார்.

"புகைப்பிடிப்பதுண்டு, ஆனால் அதற்கு " அடிமையானதில்லை" என்றேன்.

அவர் அதன் அர்த்தத்தைப் புரிந்தவராகச் சிரித்துக் கொண்டு "நான் அதற்கு அடிமைப் பட்டவனாகத் தெரிகிறேனா?" என்று கேட்டு என் முகத்தை பார்க்க நான் ஆமாம் அப்படித்தான் தெரிகிறது என்பது போல தலையாட்டினேன்.

எனது கூற்றுக்குப் பதிலுத்தாரமாக அவர் சொன்னார்."ஒன்றை கவனியுங்கள். ஒரு, மனிதனால் எந்தளவிற்கு முடியுமோ அந்தளவிற்கு வாழ்க்கையில் கிடைக்கும் சகல இன்பங்களையும் அனுபவித்துவிட வேண்டும். இது அவன் ஜனநாயக உரிமையில் ஒன்று. இதற்காகத்தான் நாம் மக்களுக்கு தங்கு தடையற்ற சுதந்திரத்தை வழங்கியிருக்கிறோம். இந்த உரிமைகளை மனிதரிடம் இருந்து பறிப்பது அல்லது கட்டுப்படுத்துவது ஜனநாயகமோ, சுதந்திரமோ ஆகாது. இதற்காகவே நாங்கள் சுதந்திரத்தையும், ஜனநாயகத்தையும் பற்றி உலகம் பூராகவும் அடிக்கடி உரத்துச் சொல்வதோடு அவற்றைப் பேணிப்பாதுகாத்து வருவதற்கான அரசுகளையும் அந்த அரசுகள் மூலம் சட்டங்களையும் வகுத்திருக்கிறோம். விவகாரம் இப்படியெல்லாம் இருக்க நீங்கள் இந்த சின்ன விசயத்திற்கே அடிமைத்தனம் என்ற வாக்கைப் பிரயோகிக்கிறீர்கள். சுதந்திரம் என்பது எல்லையற்றது.எந்த ஒரு மனிதன் மட்டிலும் அதனை ஒருவரையறை செய்து வைத்து அனுபவிக்க முடியாது. அதனால்தான் எந்தவொரு மனிதன் வாழ்க்கையில் மட்டுமல்ல எதிலும் கட்டுப்பாடற்ற சுதந்திரத்தை வழங்குவதில் எப்போதும் முன்னிற்கிறோம்".

எனக்கு மூளை கலங்கிற்று. நான் எதையோ சொல்ல, இந்த மனிதர் எதையோ எல்லாம் சம்பந்தமில்லாமல் அழகான வார்த்தைகளை அர்த்தமில்லாமலே அடுக்கிச் சொல்கிறார். இவர் பேச்சில், "சிக்கல்" உண்டே தவிர, விளக்கமோ, வழிமார்க்கமோ இருப்பதாகத் தெரியவில்லை. இப்படிச் சிக்கல் படுத்துவதுதான் சாணக்கியமா? என்ற சந்தேகம் எழுந்தது.

சுதந்திரம் ஜனநாயகம் பற்றிய உங்கள் கருத்து என்ன?என்று என்னிடம் கேட்க மாட்டாரா? என்கிற எதிர்பார்ப்பான ஆவலில் இருந்த என்னை அவரின் அடுத்த கணை ஆச்சரியத்தில் மூழ்கடித்தது.

www.tamilarangam.net

"மதுபான ரசத்தையோ,மங்கைகளையோ, சூதாட்டக்களியாட்டங்களையோ அனுபவிக்கும் சுதந்திரம் வழங்கப்படாதவிடத்து

உங்களுக்கு இந்த மனோபாவம் ஏற்பட்டதா, அன்றேல் உங்கள் மனோநிலை அறிந்து இத்தகைய இன்பசுகவாசிகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதா, அன்றேல் இந்த சுக அனுபவங்களை அனுபவிப்பதற்கு ஏற்ற பக்குவம் இல்லையென்று கருதப்பட்டதனால் கட்டுப்பாடுகள் விதிக்கப் பட்டனவா....?

இந்த மனிதர் மனோவிகாரம் பிடித்தவராக இருக்கவேண்டும் என்று முடிவு கட்டினேன். இல்லாவிட்டால், கோடானு கோடி மக்களின் வாழ்க்கை அதாள பாதாளத்திலும் ஒரு சில மனிதர்களின் வாழ்க்கை உல்லாசபுரியிலும் மேடு பள்ளமாக அமைந்திருக்கின்ற போது அதனை தெரியாதவர் போல அந்த வாழ்க்கையின் கோரத்தைப் பற்றி ஒரு வார்த்தைகூடப் பேசாமல் அந்த உணர்வே இல்லாமல் சில மனிதர்களின் இச்சாபூர்வங்களில் மட்டும் மூழ்கிவிட்டிருப்பாரா? இவர் கருதும் சுதந்திரம் ஜனநாயகம் யாருக்காக..?

என்முகத்தில் படர்ந்த வெறுப்பின் சாயலை அவர் கவனித்திருக்கவேண்டும்."கலகலத்துச் சிரித்துக் கொண்டே" இந்த மனிதர் வாழ்க்கைக்கு வேண்டாத விசயங்களைச் சுற்றிவளைத்துச் சம்பாசித்துக் கொள்கிறார் என்று நினைக்கிறீர்களல்லவா? ..உண்மையில் நான் வாழ்க்கைக்கு எது இன்றியமையாத தேவையோ,எது முக்கியமோ அதைப் பற்றித்தான் பேசுகிறேன். இந்தத் தேவைகளை ஒரு சிலர்தான் அனுபவிக்கிறார்கள் என்பதால் இந்தத் தேவை முக்கியமற்றதாகிவிடா தல்லவா?. சரி இது உங்களுக்கு பிடித்தமில்லையென்று கருதும் பட்சத்தில் அதை இன்னோர் கட்டத்தில் வேண்டுமானால் பேசிக் கொள்வோம்..." என்றவர்,ஒரு காலை மடக்கி மறுகால் மேல் அட்டணமாகப் போட்டுக் கொண்டு "வாழ்க்கை என்பதன் அர்த்தம் என்ன?என்று கேட்டு விட்டு அவர் தானாகவே "வாழ்க்கை என்பது சொர்க்கமும் நரகமும் நிறைந்தது. இந்த நியதியை மாற்றுவதென்பது ஒருபோதும் முடியாத காரியம், சோசலிஸ்டுகளோ அதனை மாற்றி அமைக்க முடியும் என அடித்துக் கூறுகிறார்கள்.. நீங்கள என்ன கருதுகிறீர்கள் என்று கேட்டார். இப்போது தான் மனம் வெளுக்கச் சிரித்தேன்.

தொடரும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒரு படைப்பானது மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் விளைவைப் பொறுத்தே அதனது சார்புத்தன்மைதீர்மானிக்கப் படுகின்றது.

வெளியீடு: வாசகர் வட்டம் - பிரான்ஸ்